விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 24
ஒலி 127 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 12 செவ்வாய்க்கிழமை (25.04.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

தமிழர் தாயகத்தில்

## இன்று பொது முடக்கம்
# வர்த்தகம், போக்குவரத்து, கல்வி
# முழுமையாக ஸ்தம்பிக்கும்



(யாழ்ப்பாணம்)

**வடக்குக் கிழக்கில் முன்னெடுக்கப்படுகின்ற சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் புதிய பயங்கரவாத சட்டத்துக்கு எதிராக தமிழர் தாயகத்தில் இன்று பொது முடக்கம் முன்னெடுக்கப்படவுள்ளது.**

**குறித்த பொது முடக்கத்தால் வர்த்தகம், போக்குவரத்து, கல்வி முழுமையாக ஸ்தம்பிதம் அடையவுள்ளதோடு பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படையும்.**

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தை நிறைவேற்றுவதற்கு எதிராகவும் தமிழ் மக்களின் பாரம்பரிய வாழிடங்கள், மதத்தலங்கள், தொல்லியல் தலங்களை ஆக்கிரமிப்பதற்கு எதிராகவும் இன்று முன்னெடுக்கப்படவுள்ள கதவடைப்புப் போராட்டத்துக்கு அனைத்து தரப்பும் ஆதரவளிப்பதாக அறிவித்துள்ளன.

**வர்த்தக நிலையங்கள் பூட்டு**

இதனால் வடக்கு, கிழக்கு முழுவதுமுள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தும் இன்று மூடப்பட்டிருக்கும். பெரு, சிறு நகரங்கள், கிராமப்புறங்களிலுள்ள வர்த்தக நிலையங்களை முழுமையாக மூடி கதவடைப்

▷15

---

க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான

கொழும்பு றோயல் கல்லூரியின்

**பரீட்சை வினாத்தாள்**

உள்ளே ☛

---

## வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர்
# ஆலயத்தின் வழிபாடுகளை யாருமே தடுக்க முடியாது
## வவுனியா நீதிமன்றம் அதிரடி உத்தரவு

(வவுனியா)

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வணக்கங்களை நடத்துவதற்கும் பக்தர்கள் செல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்கக்கூடாது என்ற உத்தரவு வவுனியா நீதிவான் நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்டு

▷16

---

## அதிக வெப்பம் இருவர் மரணம்

(கொழும்பு)

அதிக வெப்பம் காரணமாக நாட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

எப்பாவலவில் வசிக்கும் இருவரே உயிரிழந்துள்ளனர்.

அவர்களில் ஒருவர் புத்தாண்டு விழாவில் கயிறு இழுத்தல்

▷15

---

# புத்தசாசனத்தை பாதுகாக்க அரசு கடமைப்பட்டுள்ளது
## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

புத்த சாசனத்தை பேணிப் பாதுகாக்க அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளது.

ராமன்ய மகா பீடத்தின் 73 ஆவது "உப சம்பதா" நிகழ்வு தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

▷15

---

நெடுந்தீவில் ஐவர் கொலை

## கொலைக்கு பயன்படுத்திய கத்தி, சந்தேகநபரின் சாரம் மீட்பு



(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் வயோதிபர்கள் ஐவரை கொடூரமாகக் கொலை செய்வதற்கு பயன்படுத்திய கத்தி மற்றும் சந்தேக நபர் அணிந்திருந்த சாரம் என்பன கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபரை 2 நாட்கள் பொலிஸ் தடுப்புக்காவலில்

▷15

---

# கிளிநொச்சியில் இராணுவம் காணியை அபகரிக்க முயற்சி
## பொதுமக்கள் கடும் எதிர்ப்பு



(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் இராணுவம் காணியை அபகரிக்க எடுத்த முயற்சிக்கு பொதுமக்கள் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

▷15

---

வட்டுக்கோட்டையில்

## மாணவன் உயிரிழப்பு


(யாழ்ப்பாணம்)

தந்தை உதைபந்தாட்டத்திற்கு தேவையான காலணியை வாங்கிக் கொடுக்கவில்லை என 14 வயது மாணவன் ஒருவர் விபரீத முடிவெடுத்த நிலை

▷02

---

## காங்கேசன்துறை தையிட்டியில் புதிய பௌத்த விகாரை?



(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை தையிட்டி பகுதியில் புதிதாக பௌத்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

தனியார் காணியில் இராணுவத்தின் உதவியுடன் குறித்த விகாரை அமைக்கப்பட்டு வருவதாக தெரி

▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவன்...

யில் உயிரிழந்துள்ளார்.

வட்டுக்கோட்டை மேற்கு பகுதியில் வசித்து வந்த, குறித்த மாணவனே நேற்றிரவு இவ்வாறு தூக்கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

குறித்த மாணவனது குடும்பத்தின் வறுமை நிலை காரணமாக தந்தையால் உடனடியாக காலணியை வாங்கிக் கொடுக்க முடியவில்லை. இந்நிலையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாணவனது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ம-7,9,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
076 097 3127

# மாகாண சபை தேர்தல் திருத்தச் சட்டமூலம்

## பாராளுமன்றில் இன்று சமர்ப்பிப்பு

மாகாண சபைத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்தை இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தீர்மானித்துள்ளார்.

மாகாண சபைத் தேர்தல் குறித்த சட்டமூலம் தனிநபர் சட்டமூலமாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 ஒக்டோபர் 11, அன்று, மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தை திருத்துவதற்கான சட்டமூலம் தனிநபர் முன்மொழிவாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.

அதன்படி, குறித்த சட்டமூலத்தின் முதல் வாசிப்பு எதிர்வரும் 25ஆம் திகதி மேற்கொள்ளப்பட உள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இந்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் மாகாண சபைத் தேர்தலை முன்னைய முறையின் அடிப்படையில் நடாத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7,9)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திருமதி சுபேதினி அருள்தாசன்
அவர்களின் பாசமிகு தாயார்

அமரர் திருமதி
**குணசேகரம் தங்கராணி**

அவர்கள் 23.04.2023 அன்று காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் - 22.09.1954
மறைவு - 23.04.2023


பிரிவால் துயருறும்:- ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ஏழாலை மகா வித்தியாலயம், ஏழாலை.

(15358)

## மரண அறிவித்தல்

### துரைசிங்கம் ஜெயமோகன்

(சிங்கம் சவுண்ஸ் உரிமையாளர்)



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும் ஏழாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட துரைசிங்கம் ஜெயமோகன் (தாடி மாமா) அவர்கள் 23.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஏழாலை கிழக்கு ஏழாலை எனும் முகவரியிலுள்ள அவரது இல்லத்தில் 28.04.2023 வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
ஏழாலை கிழக்கு,
ஏழாலை.
077 123 3762
077 945 4688

(15359)

## மரண அறிவித்தல்

தோற்றம்
1946 - 07 - 10



மறைவு
2023 - 04 - 24

### திருமதி பத்மநாதன் உருத்திராதேவி

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பத்மநாதன் உருத்திராதேவி அவர்கள் நேற்று (24.04.2023) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான பழனித்துரை - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான நித்தியரெத்தினம், மங்கையற்கரசி மற்றும் பாலச்சந்திரன் கமலாதேவி, காலஞ்சென்ற சத்தியபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தில்லைநாதன், இராசரெத்தினம், தேவி, இந்திரா மற்றும் பாக்கியநாதன், சோமசுந்தரம், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை மற்றும் தேவகி, பூங்கோதை காலஞ்சென்ற விமலநாதன் மற்றும் கன்னிகா பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

076 699 8191 (15361) தகவல்: குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம்
1932 - 03 - 27



மறைவு
2023 - 04 - 24

### திருமதி சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

கொக்குவில் மேற்கு, மஞ்சை முனைப்பதியைப் பிறப்பிடமாகவும் தொல்புரம் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட சிவபாக்கியம் பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (24.04.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் ஓய்வுபெற்ற அதிபர் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் பா.சிவபாலன் (பொறியியலாளர் - கனடா), கலாநிதி பா.தனபாலன் (சிரேஷ்ட விரிவுரையாளர் - தேசிய கல்வியியற் கல்லூரி, கோப்பாய்) திருமதி சு.பாலகௌரி (ஆசிரியை - வட்டு இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தர்யாரும் திருமதி புஸ்பரதி (கனடா), திருமதி கர்ணி (பணிப்பாளர் - சிறுவர் பூங்கா முன்பள்ளி, திருநெல்வேலி ), கு.சுவேந்திரன் (விரிவுரையாளர் - அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும் சி.கிறீசன், சி.தரணீசன், சு.ஆர்த்திகா (மொறட்டுவ பல்கலைக்கழகம்), சு.ஆகீசன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சு.அனபாயன் (யா/பரியோவான் கல்லூரி), த.அபிநயா (யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2023) செவ்வாய்க்கிழமை காலை 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-6428) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்த்தாலுக்கு முழுமையாக ஆதரவு வழங்குங்கள்

# நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து இன்று செவ்வாய்க்கிழமை இரு பிரதான கோரிக்கைகளை முன் நிறுத்தி முழுமையாக தமிழர் தாயகத்தை முடக்கி தமிழர்களின் முழுமையான எதிர்ப்பையும் இனியும் தமிழர்கள் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் என்பதனை சர்வதேசத்திற்கும் சிங்களப் பேரினவாதத்தை எச்சரிக்கும் முகமாகவும் போராட்டம் நடைபெற உள்ளதால் தாயகமே திரண்டு வெற்றி பெறச் செய்யுமாறு அன்பாகவும் உரிமையுடனும் வேண்டுகோள் விடுக்கின்றோம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் கேட்டுக் கொண்டுள்ளது.

இது தொடர்பில் செய்திக்குறிப்பில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் தெரிவிக்கையில், பயங்கரவாத எதிப்புச்சட்ட மூலம் என்ற சிங்களப் பேரினவாத அரசின் திட்டத்தை தோற்கடிப்பது, தமிர்களின் மரபுவழித் தாயகமான வடக்கு, கிழக்கில் எமது வரலாற்றுப் பாரம்பரியத்தையும், தொன்மையையும் சிதைக்கும் நோக்குடன் தமிழர்களின் தொன்மையான வழிபாட்டுத் தலங்கள் மீது திட்டமிட்டு நடைபெறும் சிதைப்புகள், தாக்குதல்களை தடுத்து நிறுத்துதல் ஆகிய இரு முக்கிய கோரிக்கைகளோடு ஏழு தமிழ்த் தேசியக் கட்சிகளும் இணைந்து தமிழினத்திற்காக செயலாற்றுவதை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற்பதுடன் தமிழர்களின் விடுதலைக்காக ஏனைய தமிழ்த் தேசிய சக்திகளும் இணைவது காலத்தின் கட்டாயம் என்பதையும் வலியுறுத்தி நிற்கின்றது.

போராட்டம் வெற்றி பெற அனைவரையும் ஒத்துழைக்குமாறும் பங்குபற்றுமாறும் அன்புக் கட்டளையாகவும் உரிமையுடனும் மீண்டும் வேண்டுகின்றோம் என தெரிவித்துள்ளது. (நி)

### நெடுந்தீவு கொலையாளிக்கு

## அதிகபட்ச தண்டனை வழங்கக்கோரி ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு





(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு மக்களால் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டம் நேற்று திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மாவிலி துறை முகத்திலிருந்து, ஆரம்பிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் பிரதேசசெயலாளர், நெடுந்தீவு காவல் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

நெடுந்தீவு மாவிலிதுறைக்கு முன்பாக உள்ள வீட்டில் தங்கியிருந்த ஐவரை வெட்டிக் கொலை செய்து ஒருவரை காயமடைய செய்த சம்பவம் தொடர்பான குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனை விதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தி குறித்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் நெடுந்தீவிலுள்ள சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், பொது அமைப்புக்கள், இளைஞர் கழகங்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

அந்த மகஜரில்,நெடுந்தீவு மக்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் ஒவ்வொரு சமூகத்திடமும் பொலிஸ் நிலைய சட்டத்தின் ஊடாக விழிப்புக்குழுக்கள் உருவாக்கப்படவேண்டும். நெடுந்தீவின் பொது இடங்கள் இறங்கு துறை மற்றும் மனித நடமாட்டம் அதிகமாக உள்ள இடங்கள், சுற்றுலாத் தளங்கள் அனைத்திற்கும் கண்காணிப்புக் கமராக்கள் பொருத்தப்படல் வேண்டும்.

நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தால் வரையறுக்கப்பட்ட நெடுந்தீவு இடங்களை ரோந்துப் பணியினூடாக கண்காணிப்பதற்கு இடைவிடாது ஒவ்வொருநாளும் பொலிஸ் நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நெடுந்தீவின் சுற்றுலாத் தளங்களிற்கு ஒவ்வொருநாளும் சென்று நெடுந்தீவு பொலிஸ் நிலைய அதிகாரிகளால் கண்காணிக்கப்பட வேண்டும்.

வெளியூர்களில் இருந்து வந்து நெடுந்தீவின் விடுதிகளில் தங்குபவர்கள் விடுதி உரிமையாளர்களால் பூரண ஆள் அடையாளத்திற்கு உட்படுத்தல் நெடுந்தீவு பொலிஸ்நிலையத்தால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

நெடுந்தீவுக்கு உள்ளே வரும் வெளியே செல்லும் மக்களின் தரவுகளை நவீன தொழில்நுட்பத்துடன் கொண்டு பயணிகளை சிரமப்படுத்தாது அதிவிரைவாக தரவுகளை இறங்கு துறையில் வைத்து சேமித்து கொள்ளும் நடைமுறையை கொண்டுவர வேண்டும் என மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-33)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை இரகசியமாக நிறைவேற்றும் எண்ணம் இல்லை

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

(கொழும்பு)

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் நிச்சயம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். அதனை இரகசியமாக நடைமுறைப்படுத்த எந்த முயற்சியும் இடம்பெறாது என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்துள்ள அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திலுள்ள சில விடயங்களில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பாராளுமன்ற விவாதத்தின் போது அவற்றை அறிந்து கொள்ள முடியும். அதற்கமைய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டுமெனில் அதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட சர்வதேச மட்டத்தில் தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாத சட்டம் தொடர்பில் விவாதிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறான விடயங்கள் தொடர்பில் அவ தானம் செலுத்தி அதற்கமை யவே புதிய சட்ட மூலம் உரு வாக்கப்பட்டுள்ளது.

அமைதியான போராட்டங்கள் எப்போதும் அங்கீகரிக்கப்படும். ஆனால் போராட்டம் என்ற போர்வையில் முன்னெடுக்கப்படும் பயங்கரவாத செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது.

அவ்வாறானவற்றுக்கு எதிராக அரசாங்கம் கடுமையான முடிவுகளை எடுக்கும். அவ்வாறில்லை எனில் மக்கள்ரல் பாதுகாப்பாக வாழ முடியாது.

புதிய பயங்கர்வாத எதிர்ப்பு சட்ட மூலம் நிச்சயம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அதனை இரகசியமாக நடைமுறைப்படுத்த எந்த முயற்சியும் இடம்பெறாது என்றார். (நி)

## ஜனாதிபதித் தேர்தலில் குதிக்க உள்ள சம்பிக்க

(கொழும்பு)

அடுத்த ஜனதிபதித் தேர்தலில் போட்டியிடும் சாத்தியம் இருப்பதாக முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது.

ஜனாதிபதியாக யார் சிறந்தவர் என்பதை பொதுமக்கள் இறுதியில் தீர்மானிப்பார்கள்.

குடும்ப ஆட்சியையோ அல்லது பெற்றோர்கள் செய்தவற்றின் மீது சவாரி செய்வதையோ ஆதரிக்க மாட்டேன் என அவர் தெரிவித்தார். (நி)

## அம்பாந்தோட்டையில் நிலநடுக்கம்

(கொழும்பு)


அம்பாந்தோட்டையில் நேற்று அதிகாலை 4.4 ரிச்சர் அளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

அம்பாந்தோட்டை கடற்கரையில் இருந்து 25.8 கிலோ மீற்றர் தொலைவில் நேற்று திங்கட்கிழமை அதிகாலை 12.45 மணியளவில் குறித்த நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, குறித்த நில நடுக்கத்தால் சுனாமி அச்சுறுத்தல் ஏதும் இல்லையெனவும் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லையெனவும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி)

## வடக்கு-கிழக்கில் பௌத்த ஆக்கிரமிப்பு என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்கு, கிழக்கில் சிங்கள - பௌத்த ஆக்கிரமிப்பு என சொல்லப்படுவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கில் இன்று செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள ஹர்த்தால் தொடர்பில் ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஹர்த்தால் போராட்டம் மக்களின் நாளாந்த வாழ்வாதாரத்தை முடக்குகின்ற போராட்டமாகும்.

நாட்டின் பொருளாதாரத்துக்கும் பாரதூரமான தாக்கத்தை செலுத்துகின்ற போராட்டமாகும்.

ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்துள்ள தமிழ்க் கட்சிகள் இதைக் கவனத்திற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மக்களை அடக்கி ஒடுக்கும் வகையில் பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு கொண்டு வரப்படுகின்றதென தமிழ்க் கட்சிகள் உள்ளிட்ட எதிர்க் கட்சிகளால் பரப்பப்படும் வதந்திகளை நாம் அடியோடு மறுக்கின்றோம்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட வரைவு பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பின்னர்தான் அது தொடர்பான கருத்துக்களை வெளியிட முடியும்.

சட்டவரைவில் திருத்தங்களையும் மேற்கொள்ள முடியும். அதைவிடுத்து அந்த சட்ட வரைவுக்கு எதிராகப் போர்க்கொடி தூக்குவது ஹர்த்தால் நடத்துவதும் ஏற்றுக்கொள்ள முடியாதவை எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல் தொடரில் எனது நீண்டநாள் கனவு நிறைவேறியது-சிராஜ்



29 வயதான சிராஜ் கடந்த 2017 முதல் ஐ.பி.எல் அரங்கில் விளையாடி வருகிறார். முதல் சீசனை ஹைதராபாத் அணிக்காக விளையாடினார். அதன் பிறகு 2018 முதல் ரோயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு அணிக்காக் விளையாடி வருகிறார். இதுவரை 71 போட்டிகளில் விளையாடி 71 விக்கெட்டுகளை அவர் கைப்பற்றி உள்ளார். இந்நிலையில் நடப்பு சீசனில் 6 போட்டிகளில் விளையாடி 12 விக்கெட்டுகளை சிராஜ் கைப்பற்றியுள்ளார்.

இதன் மூலம் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பவுலர் என்பதற்கான அங்கீகாரமாக பர்பிள் கப்பை அவர் பெற்றுள்ளார். இது குறித்து சிராஜ் கூறியதாவது.

கடந்த ஐ.பி.எல் சீசன் நான் எதிர்பார்த்த அளவுக்கு எனக்கு சிறப்பானதாக அமையவில்லை. நான் செயற்படுத்த விரும்பியதை என்னால் செய்ய முடியாமல் போனது. இப்போது இந்திய அணியில் இடம்பிடித்து விளையாடி வருகிறேன்.

மூன்று பார்மெட்டிலும் விளையாட விரும்புகிறேன். ஆனால், அது என் கைகளில் இல்லை. எனது எண்ணம் எல்லாம் சிறப்பாக செயற்படுவதில் மட்டுமே உள்ளது. அதை செய்கிறேன்.

பவுலிங்கில் எனது ரிதமில் கவனம் செலுத்தி வருகிறேன். நான் முன்பு புவனேஷ்வர் குமார் சார்பில் பர்ப்பிள் கப் வாங்கினேன். அப்போது நானும் ஒருநாள் அதிக விக்கெட் வீழ்த்தி பர்ப்பிள் கப் வெல்ல வேண்டும் என கனவு கொண்டேன். அது இப்போது நடந்துள்ளது மகிழ்ச்சி எனக் கூறினார். (4)

# 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் திரில் வெற்றி பெற்றது பெங்களூரு



10 அணிகள் பங்கேற்றுள்ள 16 ஆவது ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல வேறு நகரங்களில் நடந்து வருகிறது.

பெங்களூரில் நேற்று முன்தினம் மதியம் 3.30 மணிக்கு நடைபெற்ற 32 ஆவது லீக் ஆட்டத்தில் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூரு, ராஜஸ்தான் ராயல்ஸ் அணிகள் மோதின. டாஸ் வென்ற ராஜஸ்தான் அணி பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட்டுக்கு 189 ஓட்டங்கள் எடுத்தது. மேக் ஸ்வெல் 44 பந்தில் 4 சிக்சர், 6 பவுண்டரி உட்பட 77 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். டு பிளசிஸ் 39 பந்தில் 2 சிக்சர், 8 பவுண்டரி உட்பட 62 ஓட்டங்கள் எடுத்தார்.

ராஜஸ்தான் அணி சார்பில் போல்ட், சந்தீப் சர்மா 2 விக்கெட், அஷ்வின், சஹல் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர். இதையடுத்து, 190 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ராஜஸ்தான் அணி களமிறங்கியது. தொடக்க ஆட்டக்காரர் ஜோஸ் பட்லர் டக் அவுட்டானார். அடுத்து இறங்கிய தேவ்தத் படிக்கல், ஜெயிஸ்வாலுடன் ஜோடி சேர்ந்தார். சிறப்பாக ஆடிய படிக்கல் அரை சதமடித்து 52 ஓட்டங்களில் அவுட்டானார். 2 ஆவது விக்கெட்டுக்கு இந்த ஜோடி 98 ஓட்டங்கள் சேர்த்தது.

அரை சதமடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், ஜெயிஸ்வால் 47 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். சஞ்சு சாம்சன் 22 ஓட்டங்களில் அவுட்டானார்.

ஹெட்மயர் 3 ஓட்டங்களில் வெளியேறினார். இறுதியில், ராஜஸ்தான் அணி 182 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. இதன்மூலம் பெங்களூரு அணி பரபரப்பான ஆட்டத்தில் 7 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்று 4 ஆவது வெற்றியைப் பதிவு செய்தது. (6)

# 20 ஓவர் கிரிக்கெட்டில் டோனி புதிய சாதனை

ஐதராபாத்துக்கு எதிரான ஆட்டத்தில் சென்னை சுப்பர் கிங்ஸ் கப்டனும் விக்கெட் கீப்பருமான டோனி ஒரு கேட்ச், ஒரு ஸ்டம்பிங், ஒரு ரன் அவுட் செய்தார்.

இதன் மூலம் 20 ஓவர் கிரிக்கெட்டில் அதிக கட்ச் பிடித்த விக்கெட் கீப்பர் என்ற சாதனையை படைத்தார். அவர் மொத்தம் 208 கேட்ச் பிடித்த தென்ஆபிரிக்காவின் டிகாக்கை (207) முந்தினார்.

3 ஆவது இடத்தில் இந்தியாவின் தினேஷ் கார்த்திக் (205), 4 ஆவது இடத்தில் பாகிஸ்தான் கம்ரன் அக்மல் (172), 5 ஆவது இடத்தில் வெஸ்ட் இண்டீசின் ராம்தின் (150) உள்ளனர். (4)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2817

### ஜெனா

ஒரு நாளைக்கு 3 மணி நேரத்திற்கும் மேலாக ஸ்மார்ட் போன் பயன்படுத்துவதால் இளைஞர்களுக்கு முதுகு வலி ஏற்படுவதாக ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆய்வில், தகவல்!



தெய்வமே இந்த நியூஸ்ஸ எங்க அம்மா கண்ணுல படாம பாத்துக்கணும்.

### திலானி


காதலிக்க ஒரு வாரம் லீவு சீனாவில தாராங்களாம் தெரியுமா...?



ஒரு வருஷம் லீவு தந்தா கூட எனக்கு காதலிக்க ஆளும் கிடையாது. பிக்கப் பண்ண அறிவும் கிடையாது போதுமா....!

### மாதுரி

உன் மனைவியாலதான் நீ குடிக்கிறதையே விட்டியா?



ஆமா, குடிச்சா அவ ரெண்டா தெரியுறா, ஒருத்தியையே சமாளிக்க முடியல... அதான் பயந்து போய் குடிக்கிறதையே விட்டுட்டேன்.

### கரிகாலன்

மூனு மாசமா ஒரு கம்பெனில வேலை பாத்துட்டு இருந்தியே... திடீர்னு ஏண்டா வேலைய விட்டு தூக்கிட்டாங்க?

நான் சோம்பேறியா இருக்கேனாம்..அதான்...



இத கண்டுபிடிக்கவே மூனு மாதம் ஆயிருக்கே... அவன் எவ்வளவு சோம்பேறியா இருப்பான்?

### நரேஸ்

அப்பவே பெரியவங்க சொன்னாங்க கிணத்துல கல்லுப் போடாதா கல்யாணம் ஆகாதுன்னு...




நான்தான் கேக்காமா ஒரு 4,5 கல்லு போட்டேன். இன்னும் 4 ஜென்மத்துக்கு கல்யாணம் ஆகாது போல...

### துஷா

இப்படி ஒரு மாப்பிள்ளை எங்க தேடினாலும் உங்க பொண்ணுக்குக் கிடைக்காது.




ஆமா...நாலஞ்சு வருசமா பொலிஸ்காரங்க தேடியே கிடைக்கலனா பாத்துக்குங்க!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# தெல்லிப்பளை மருத்துவமனையில் குருதி வகைகளுக்கு தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தெல்லிப்பளை ஆதார மருத்துவமனை இரத்த வங்கியில் அனைத்து குருதி வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவுவதாக தெல்லிப்பளை ஆதார மருத்துவமனை இரத்த வங்கி பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மருத்துவமனை இரத்த வங்கியில் குருதித் தட்டுப்பாடு நிலவுவதனால் நோயாளர்களுக்கு தேவையான குருதியை வழங்க முடியாதிருப்பதாகவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய குருதிக்கொடையாளர்கள், இரத்த வங்கிக்கு வருகை தந்து இரத்த தானம் செய்து உயிர் காக்கும் பணிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் தெல்லிப்பளை ஆதார மருத்துமனையின் இரத்த வங்கியினர் அறிவித்துள்ளனர். (நி-6)



நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் புதல்வரான இராம்குமார் நேற்று மூளாய் கூட்டுறவு மருத்துவமனைக்கு வருகை தந்து நினைவுக் கல்வெட்டை திறந்து வைத்தார். (படம்:-கஜிந்தன்)

# அவதார புருஷர் கண்ணன் ஐயா!

**சிவஸ்ரீ தியாக.**
**சோமாஸ்கந்தராஜாக் குருக்கள் BA. MA**

சைவசித்தாந்த பண்டிதர், பாலசோதிட சிந்தாமணி, அகில இலங்கை திருவள்ளுவர் கோட்டம் தலைவர், நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில், இலட்சுமணந்தோட்டம் ஸ்ரீ வீரமாகாளி அம்மன், வட பத்திரகாளி அம்மன், தேவஸ்தான பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்

## அவர்களின் அறுபதாவது பிறந்தநாள் நினைவலைகள்



அமரர். தியாக சோமாஸ்கந்த ஐயா அவர்கள் ஓர் அவதார புருஷர் எனலாம்.

ஐயா அவர்களின் முதலாம் ஆண்டு நினைவுமலரில் எனது கட்டுரையில் பக்கங்கள் ஒதுக்க முடியாத நிலையில் சுருக்கமாக ஐயா அவர்கள் தீர்க்கத்தரிசியும் அவதார புருஷரும் என்று சுருக்கமாகவே குறிப்பிட்டிருந்தேன். இப்போது பத்திரிகைக் கட்டுரை என்கின்ற காரணத்தால் அவதாரபுருஷர் என்பதை விளக்கமாக எழுத வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. ஐயா அவர்களின் பிள்ளைப் பருவத்தில் கண்ணன் ஐயா கண்ணன் ஐயா என்றே எல்லோரும் செல்லமாக அழைத்து வந்தார்கள். காலப்போக்கில் அதுவே அவரின் நிலையான பெயராக இடம்பெற்றுவிட்டது. இதனை இறைவனின் திருவிளையாடல் என்றே குறிப்பிடலாம்.

கண்ணன் என்று நாம் போற்றுவது காத்தற் கடவுளாகிய விஷ்ணு பகவானையே. இவரைப்பற்றி பன்னிரெண்டு பாடல் கொண்ட கெருடப்பத்து என்னும் ஒரு பதிகம் உண்டு. இதில் முதலாவது பாடலாக வருவது.

**ஓம் பூரணனே பதினாறு திங்கள் சேரும்**
**பொருந்தியே அருக்கன் பதினெட்டும் சேரும்**
**காரணனே கரியமுகில் மேனி சேரும்**
**கருணைபெறு அஷ்டாச்சரம் கலந்து வாழும்**
**வாரரெனே இலக்குமியோடெட்டும் சேரும்**
**மதிமுகம் போல் நின்றிலங்கு மாயநேயா**
**ஆரணனே ரகுராமா கெருடன்மீதில்**
**அன்புடனே ஏறிவந்து அருள் செய்வாயே.**

இங்கே ரகுராமா என்று குறிப்பிட்டிருப்பது கவனத்தில் எடுக்க வேண்டிய முக்கிய விடயமாகும். இதே கெருட்பதத்தில் எட்டாவது பாடலாக.

**பச்சை முகில் மேனியனே உனக்கு இந்த**
**பார்தனிலே பத்து அவதாரம் உண்டு**
**மச்சம் என்றும் கூர்மம் என்றும்**
**வராகம் என்றும் வாமம் என்றும்**
**ராமம் என்றும் பௌத்தம் என்றும்**
**துஷ்டரை அடக்க மோகினி**
**வேடங் கொண்டு தோற்றினாய்**
**உன் சொருபம் எல்லாம் அறிவார் உண்டோ**
**அச்சந் தீர்ந்தெனை யானக் கெருடன் மீசில்**
**அன்புடனே ஏறி வந்து அருள் செய்வாயே**

இதிலும் கண்ணனுடைய பத்து அவதாரங்களில் ராம அவதாரம் மிக முக்கியமான ஒரு மனித அவதாரம்.

இராமன் கம்பராமாயணத்தின் கதாநாயகன். கம்பராமாயணம் அயோத்தியா காண்டத்தில் இராமனுடைய அவதாரம் பற்றி முதலாவது பாடலில் கம்பன் மேல்வருமாறு கூறியிருந்தார்.

**வானின்றிழிந்து வரம்பிகந்து**
**மாபூதத்தின் வைப்பெங்கும் ஊனும் உயிரும் உணர்வும் போல்**
**உள்ளும் புறத்தும் உளனென்ப**
**கூனும் சிறிய கொத்தாயும்**
**கொடுமை இழைப்பக் கோல் துறந்து**
**கானுங் கடலும் கடந்து இமையோர்**
**இடுக்கண் காத்த கழல் வேந்தே.**

வானுலகில் இருந்து மண்ணுலகிற்கு மனித அவதாரம் எடுத்து இராமன் தோன்றியது தெளிவாகி விட்டது. இராமன் வாலிபப் பராயம் அடைந்த போது விசுவாமித்திரர். தான் செய்த யாகத்தைப் பாதுகாக்க இராமனை அழைத்துச் சென்றதும் யாகம் வெற்றிகரமாக நிறைவேறிய பின் இராம இலட்சுமணரை ஜனகமகாராசனின் நாடாகிய மிதிலைக்கு அழைத்துச் சென்றதும் அங்கே வைக்கப்பட்டிருந்த சிவதனுசை இராமன் முறித்துச் சீதையை மணம் புரிந்த வரலாறு தெரிந்த விடயமே. அவதார புருஷர்கள் என்ன நோக்கத்திற்காக பூவுலகில் பிறக்கிறார்களோ அந்த நோக்கம் நிறைவேறியதும் தமது இடத்திற்கே சென்று விடுவார்கள். இந்த வகையில் கண்ணன் ஐயா அவதார புருஷர் என்பதற்காதாரம் மிகச் சிறுவயதிலேயே குருப்பட்டம் தரித்து பத்திரகாளி அம்மனின் பூசைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். ஏற்றுச் சில வருடங்களின் பின் ஆலய நிர்வாகிகள் ஐயாவை பூசையில் இருந்து நீக்குவதற்கு நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்தார்கள். ஐயாவினுடைய சந்ததியினர் பூசை செய்யக்கூடிய நிலை இருக்கும் வரை பூசைப் பொறுப்பை நீக்க முடியாது என்று நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஐயா பாடசாலைப் பொறுப்பில் இருந்தபடியால் பூசைப் பொறுப்பை மூத்த மருமகனிடம் எழுத்து மூலம் ஒப்படைத்து விட்டார். அதன்படி சுந்தரலிங்கம் குருக்கள் சம்பளம் வாங்காது பூசையைச் செய்து வருகின்றார்.

ஐயாவும் அவதார புருஷராக எவ்விதம் கணிக்கப்படுகின்றார் என்றால் இராமன் மிதிலைக்குச் சென்று சீதையைக் கண்டதும் காதல் கொண்டதை அண்ணனும் நோக்கினான் அவளும் நோக்கினாள் எனக் கம்பன் கவி பாடியுள்ளான். கண்ணன் ஐயாவும் வாலிபப் பருவம் அடைந்த போது சைவப் பெருமக்கள் அதிகளவில் வாழ்ந்த மறுவன்புலோவிற்கு தனியாகச் சென்றுள்ளார். அங்கே புவனேஸ்வரி அம்மாவைக் கண்டதும் அவரையே தனது துணைவியாக கொள்ள வேண்டும் என துணிந்து கொண்டார். இதனைப் புவனேஸ்வரி அம்மாவின் பெற்றோருக்கும் தனது பெற்றோருக்கும் தெரியப்படுத்தினார். இரு பகுதியும் ஒப்புக் கொண்டு மறுவன்புலோ சிவன் கோவிலில் திருமணம் சிறப்புற நடந்தேறியது. புவனேஸ்வரி அம்மாவிற்கு ஐயாவின் வீடு புகுந்தமனை இராமன் சீதையை அயோத்திக்கு அழைத்து வந்தது போல ஐயாவும் புவனேஸ்வரி அம்மாவை இலட்சுமணன் தோட்டத்திற்கு அழைத்து வந்தார். இராவணன் சீதையை அசோக வனத்தில் சிறை வைத்திருந்த போது வானரப் படையின் உதவியுடன் பாக்குநீரிணையில் அணையை அமைத்து அதன் மேலாக இராம இலட்சுமணனும் அனுமானும் நடந்து வந்து தும்பளையில் சுரங்க வீடொன்று அமைத்து அதில் இருந்து கொண்டு இலட்சுமணன் தோட்டம் என்று பெயரிட்டு மிகப் பெரிய அளவில் கிழக்கு வாயில் பிள்ளையார் ஆலயமும் அதற்குக் கிழக்கே காவற் தெய்வமாக வீரமாகாளியையும் வைத்து வழிபட்டார்கள்.

இராம இலட்சுமணனின் பாதம் பதிந்த இலட்சுமணன் தோட்டமே ஐயா அவர்களின் பிறப்பிடமாக அமைந்ததும் அவதார புருஷர்களுக்குக் கிடைக்கும் பெரும் பேறாகும். அவர் அவதார புருஷர் என்பதால் எத்தனையோ ஆலயங்களின் மஹா கும்பாபிஷேகங்களையும் கொடியேற்றத் திருவிழாக்களையும் செய்து தெய்வங்களைத் திருப்திப்படுத்தி பக்தர்களுக்கு அருள்பாலிக்க வைத்தார். தனது அவதார காலத்தில் எது எது செய்ய வேண்டுமோ அதையெல்லாம் சிறப்பாகச் செய்து தனது அவதாரத்தையும் நிறைவு செய்து கொண்டார்.

**திருக்குறள் கலாநிதி. ஆ.வடிவேலு.**

(c-6425)

# இராசிபலன்

**25.04.2023**
**சித்திரை 12, செவ்வாய்க்கிழமை**
**பஞ்சமி முற்பகல் 11.11 மணிவரை**
**ரோகினி பின்னிரவு 5.33 மணிவரை**

**சுபநேரம் -10.30-12.00 மணிவரை**
**இராகுகாலம்-3.00-4.30 மணிவரை**
**சஷ்டி விரதம்**

**சந்திராஷ்டமம் - அனுசம்**

**வளவன்**

**மேஷம்:** சகோதர வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்:** தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம் பெறும் வாய்ப்புண்டு, சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம்.

**துலாம்:** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தடைகள் விலகி காரிய சித்தி ஏற்படலாம், ரோக பயமுண்டு, பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மகரம்:** உற்சாகத்தோடு பணி புரியும் நாள், வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**ரிஷபம்:** பொது வாழ்வில் புகழ் கூடும், உறவினர் மத்தியில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், நிதி நிலை உயரும் நாள், செயற்பாட்டில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம்.

**சிம்மம்:** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், மகிழ்சசி தரும் பயணங்கள் இடம்பெறலாம், விலை உயர்ந்த பெருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

**விருச்சிகம்:** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பொது வழியில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்:** வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், இறை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.

**கன்னி:** அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், செயற்பாடுகளில் தீவிரம் காட்ட முற்படுவீர்கள், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.


**தனுசு:** குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், போசன சுகமுண்டு.

**மீனம்:** தொலைதூரத் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், செய்தொழிலில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும்.

பலர் அறிவுரை பெறுகிறார்கள்; ஆனால் சிலரே பயனடைகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்கக் கோரி
## சாவகச்சேரியில் துண்டுப்பிரசுரம்



(சாவகச்சேரி)
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பயங்கர வாத எதிர்ப்புச்சட்டம் உள்ளிட்ட பல காரணிகளை எதிர்த்து இன்று செவ்வாய்க் கிழமை முன்னெ டுக்கப்படும் ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்கக் கோரி நேற்று திங்கட்கிழமை காலை சாவகச்சேரி நகரில் பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு துண்டுப்பிரசுரம் வழங்கி வைக்கப்பட்டது.

சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன், சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான கிஷோர் மற்றும் கஜிதன் ஆகியோர் வியாபாரிகள் மற்றும் பொது மக்களுக்கு துண்டுப் பிரசுரங்களை வழங்கி ஹர்த்தாலுக்கு பூரண ஒத்துழைப்பினை நல்கி சிறுபான்மையினரின் நலனை காக்க முன் வருமாறு கேட்டுக் கொண்டுள்ளனர். (நி-6-33)

# துடுப்பாட்ட போட்டியும் சதுரங்க சுற்றுப் போட்டியும்

(யாழ்ப்பாணம்)
தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் சர்வதேச தென்மராட்சி அபிவிருத்திக் கழகத்தின் அனுசரணையுடன் எதிர்வரும் 29 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் யா/சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயத்தில் கடினப்பந்து துடுப்பாட்ட வெற்றிக்கிண்ணப் போட்டியும் சதுரங்கப் போட்டியும் இடம்பெறவுள்ளன.

தென்மராட்சிவலயக்கல் விப் பணிப்பாளர் த.கிருபா கரன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் ஜோன் குயின்ரஸ்ம் சிறப்பு விருந்தினர்களாக யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன், மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி அதிபர் லலிதாமலர், யா/டிறிபேர்க் கல்லூரி அதிபர் பரின் பதாதன் ஆகியோரும் விசேட விருந்தினர்களாக தென்மராட்சி அபிவிருத்திக்கழகம் லண்டனைச் சேர்ந்த வெ.அசோகன் மற்றும் சர்வதேச தென்மராட்சி அபிவிருத்திக்கழக விளையாட்டு இணைப்பாளர் ம.சிறீதரனும் கௌரவ விருந்தினர்களாக இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் வி.சுதர்சன் மற்றும் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற பொருளாளர் வ.ஸ்ரீபிரகாஸ்ம் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4-30)

# மோட்டார் சைக்கிள் திருடியவரை நையப்புடைத்த இளைஞர்கள்

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை பகுதியில் உள்ள ஆலயமொன்றில் நின்ற மோட்டார் சைக்கிளை திருடிய நபர் மீது பிரதேச இளைஞர்கள் தாக்குதல் நடத்தியதில் மேற்படி நபர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு ஆலயமொன்றின் முன்பாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்பித்துச் செல்ல முற்பட்ட நபர் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதில் படுகாயமடைந்த நபர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-6-30)

### தந்தை செல்வாவின் நினைவுத்தூபி திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)
தந்தை செல்வாவின் (ஈழத்து காந்தி, மூதறிஞர் சா.ஜே. வே. செல்வநாயகம் QC) 46 ஆவது நினைவு தின நிகழ்வும் நினைவுத்தூபி திரை நீக்கமும் நாளை புதன் கிழமை மாலை 4.30 மணிக்கு தெல்லிப்பழை சேமக்காலை, ஆஸ்பத்திரி வீதி எனும் இடத்தில் தந்தை செல்வா நினைவு அறங்காவல் குழுத் தலைவர் ஓய்வுநிலை பேராயர் கலாநிதி. சு.ஜெபநேசன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (நி-6)

# 26 கிலோ கேரளக் கஞ்சா மீட்பு
## ஒருவர் கைது



(யாழ்ப்பாணம்)
. பலாலி அன்ரனிபுரம் பகுதியில் 26 கிலோ கேரள கஞ்சாவுடன் ஒருவர் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு உள்ளதாக பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

21 வயதான குறித்த நபர் அதே பகுதியை சேர்ந்தவர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 80 லட்சத்துக்கு அதிகம் என கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும்இந்த கஞ்சா கடத்தலுடன் வடமராட்சி கிழக்கு உடுத்துறை பகுதியைச்சேர்ந்த நபர் ஒருவரும் தொடர்புபட்டுள்ளார் என பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி-6-33)

# பனைவளம் அழிவதைத் தடுக்க விசேட வேலைத்திட்டம் முன்னெடுப்பு

(யாழ்ப்பாணம்)
வடக்கு மாகாணத்தில் பனை வளம் அழிக்கப்படுவதை தடுக்க விசேட வேலைத் திட்டத்தை பனை அபிவிருத்தி சபையும் தென்னை பயிர்ச் செய்கை சபையும் இணைந்து முன்னெடுக்கப்படவுள்ளதாக தென்னை பயிர்ச்செய்கை சபையின் யாழ். பிராந்திய முகாமையாளர் தே.வைகுந்தன் தெரிவித்தார்.

நேற்று யாழில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். வட மாகாணத்தில் தென்னைச் செய்கையும் பனை செய்கையும் கூடுதலான அளவு மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆனால் பனை என்ற வளம் மிக முக்கியமானது. வடக்கு மாகாணத்தின் வளங்களாக இரண்டு கண்கள் காணப்படுகின்றன.

ஒன்று தென்னை மற்றையது பனை. ஆனால் பனை வளம் படிப்படியாக ஓரளவுக்கு குறைந்து கொண்டு செல்கின்றது.

தென்னை செய்கை வீதம் கூடுதலாக இருக்கின்றது. பனையினை வெட்டிதென்னை செய்கையினை கூடுதலாக செய்கின்ற நிலைமை காணப்படுகின்றது.

எமது பரிந்துரைக்கிணங்க தென்னை, பனைச் செய்கையினை ஒன்றாக இணைத்து செய்வதற்குரிய ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது.

அதாவது ஒரு புதிய வேலைத்திட்டம் ஒன்றினை நாங்கள் முன்னெடுப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளோம். அதற்கான முன்னாயத்த வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறிப்பாக தென்னை செய்கையை மேற்கொள்ளாது பனை மரம் அழிப்பதை நிறுத்துவதும் பனை, தென்னையை ஒன்றாக இணைத்து வளர்ப்பதை ஊக்குவிப்பதே அதன்நோக்கமாகும். இதற்கான திட்டம் விரைவில் பனை அபிவிருத்தி சபையும், தென்னை பயிர்ச்செய்கை சபையும் இணைந்து கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிறது என அவர் தெரிவித்தார். (நி-6-33)

# வட்டுக்கோட்டை ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)
• வட்டுக் கோட்டை-அடைக் கலந்தோட்டம் ஸ்ரீ கந்த சுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை புதன்கிழமை முற்கல் 10 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறும் இவ் மஹோற்சவத்தில் எதிர்வரும் மே மாதம் 4 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் வெள்ளிக் கிழமை முற்பகல் 11 மணிக்கு தீர்த்தத்திருவிழா வும் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளது. (நி-6)

# பொலிஸார் எனக் கூறி வாகனம் பறிமுதல்
## லீசிங் நிறுவன ஊழியர் கைது

(யாழ்ப்பாணம்)
லீசிங் நிலுவைப் பணம் செலுத்தவில்லை என தெரிவித்து தம்மை பொலிஸார் என அறிமுகப்படுத்தி டிப்பர் வாகனத்தை பறிமுதல் செய்த நிதி நிறுவனத்தின் பணியாளர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூவர் தேடப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த ஒருவர் நிதி நிறுவனம் ஒன்றில் குத்தகைக்கு டிப்பர் வாகனம் எடுத்துள்ளார். அவரது வாகனம் கடந்த சில நாட்களுக்கு முன்னர் கோப்பாய் வீதி சமிஞ்ஞை விளக்கில் தரித்து நின்ற போது அங்கு வந்த நால்வர் தம்மை பொலிஸார் எனக் கூறி லீசிங் தவணைப் பணம் செலுத்தவில்லை என வாகனத்தை பறிமுதல் செய்து எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வாகனத்தை லீசிங்கில் கொள்வனவு செய்தவரினால் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

தனது வாகனத்துக்குள் அலைபேசி ஒன்றும் 50 ஆயிரம் ரூபாய் பணம் என்பன இருந்ததாகவும் முறைப்பாட்டில் அவர் குறிப்பிட்டிருந்தார்.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், கோப்பாயைச் சேர்ந்த ஒருவரை கைது செய்துள்ளனர். மேலும் மூவரை தேடிவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர் மீது சட்டத்துக்கு புறம்பாக வாகனத்தை பறிமுதல் செய்தமை, வாகனத்துக்குள் இருந்த பணம், அலைபேசியை கொள்ளையிட்டமை மற்றும் பொலிஸார் என மோசடியாக தம்மை அறிமுகப்படுத்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளின் கீழ் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது. (நி-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடந்த மூன்று மாதங்களில் தொழுநோயாளிகள் அதிகரிப்பு

## தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கம்



**(கொழும்பு)**

**கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கடந்த மூன்று மாதங்களில் இலங்கையில் தொழுநோயாளிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என தேசிய தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.**

இதற்கமைய, குறித்த காலப்பகுதியில், நாட்டின் பல பகுதிகளில் சுமார் 355 தொழுநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளதுடன் அவர்களில் பெரும்பாலானவர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளனர்.

மேலும், பதிவாகியுள்ள தொழுநோயாளிகளில் சுமார் 10 வீதமானவர்கள் சிறுவர்கள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## கேள்விகோரல் - 2023
## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி - சிற்றுண்டிச்சாலை

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிற்றுண்டிச்சாலையினை 2023ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து ஒரு வருட காலத்துக்கு மாதாந்த வாடகை முறையில் நடத்திச் செல்வதற்கான பொருத்தமான ஒப்பந்தகாரரை தெரிவு செய்வதற்கான கேள்வி கோரல்கள் வரவேற்கப்படுகின்றன. (இரண்டு சிற்றுண்டிச்சாலைகள், இடைநிலைப்பிரிவு, உயர்தரப்பிரிவு)

கேள்வி கோரலுக்கான விண்ணப்பப்படிவத்தை ஒப்பந்தகாரர் மீளளிக்கப்படாத செலுத்துகையான ரூபா 1000.00 ஐ (அரசாங்க வரிகள் உள்ளடங்கலாக) செலுத்திப் பாடசாலை கடமை நாட்களில் அலுவலகத்தில் 26.04.2023 தொடக்கம் மு.ப 9.00 மணி முதல் பி.ப 1.00 மணிவரை செலுத்திப் பெற்றுக்கொள்ள முடியும்.

ஆரோக்கிய உணவுகள் வழங்க முன்வரும் கேள்விப்பத்திரத்துக்கு சலுகை வழங்கப்படும்.

விண்ணப்பப்படிவங்கள் பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி என்ற முகவரிக்கு சேர்க்கப்பட வேண்டும். தபாலுறையின் இடது பக்கமேல் மூலையில் **சிற்றுண்டிச்சாலை நிர்வகிப்பதற்கான கேள்வி கோரல் -2023** எனக் குறிப்பிட வேண்டும்.

கேள்வி கோரல்களுக்கான விண்ணப்பங்கள் 08.05.2023 பி.ப 1.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஜி-6424)

**தலைவர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

**செயலாளர்,**
**பாடசாலை அபிவிருத்திக்குழு,**
**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி,**
**யாழ்ப்பாணம்.**

## வலிகாமம் மேற்கு பிரதேச சபை, சுழிபுரம்
## ஆதனப் பெயர்மாற்றம்

18, வைரவர் கோயில் 1 ஆம் ஒழுங்கை, வட்டாரம்-13

வலிகாமம் மேற்கு பிரதேச சபை அராலி உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம்- 13. வைரவர் கோயில் 1 ஆம் ஒழுங்கையிலுள்ள இல 18 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப் பதிவேட்டின் பிரகாரம் சின்னப்பு சின்னத்தம்பி என்றே காணப்படுகிறது.

குமாரசாமி விஜயகுமார் பெண் ஜெயபாலநாயகி பிரசித்த நொத்தாரிசு பா .தவபாலன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1386/14.06.1994 இலக்க உறுதியால் பூபாலசிங்கம் கைம்பெண் அன்னம்மா ஆகியவரிடமிருந்து குறித்த ஆதனத்தை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

பிரகாசம் பிரான்ஸிஸ் சேவியர் பெண் வான் சலிஸ்ரா பிராத்மி பிரசித்த நொத்தாரிசு ஜெயசித்திரா சிறீதரன் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 1844/ 22.08.2013 ஆம் இலக்க உறுதியால் குறித்த குமாரசாமி ரஞ்சித் விஜயகுமாரும் பெண் ஜெயபாலநாயகியும் ஆகியவர்களிடமிருந்து குறித்த ஆதனத்தை சீதனமாகப் பெற்று சொந்தமும் உரித்துமுடையவரானார்.

குறித்த பிரகாசம் பிரான்ஸிஸ் சேவியர் பெண் வான் சலிஸ்ரா பிராத்மி ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது பிரகாசம் பிரான்ஸிஸ் சேவியர் பெண் வான் சலிஸ்ரா பிராத்மி ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**செயலாளர், வலிகாமம் மேற்கு பிரதேச சபை.** (5396)

## நாட்டை விட்டு வெளியேறும் தாதியர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டை விட்டு வெளியேறும் தாதியர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக சுகாதார திணைக்களத்தின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக 2022 ஆம் ஆண்டு ஜனவரிக்கும் 2023 ஆம் ஆண்டு ஜனவரிக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் சுமார் எழுநூறு தாதிகள் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதேவேளை, தாதியர் சேவையில் தற்போது சுமார் இரண்டாயிரத்து நானூறு வெற்றிடங்கள் காணப்படுவதாகவும் இந்த வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (தாதியர் கட்டுப்பாடு) சாமிக்க கமகே தெரிவித்துள்ளார். (நி)

## பண்டிகைக் காலத்தில்
## காலாவதியான பொருட்களை விற்பனை செய்த சுமார் 8 ஆயிரம் வர்த்தகர்கள் கைது

(கொழும்பு)

காலாவதியான பொருட்களை விற்பனை செய்த வர்த்தகர்களை நுகர்வோர் விவகார அதிகாரசபையின் விசாரணை அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இதன்போது பண்டிகைக் காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு மேல் உணவுப் பொருட்கள் மற்றும் இனிப்பு வகைகளை விற்பனை செய்த 8,231 வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சில வர்த்தகர்கள் காலாவதியான கேக், பிஸ்கட் மற்றும் பிற பொருட்களை விற்பனை செய்துள்ளனர்.

இதேவேளை நாடு முழுவதும் 5,200 விசேட புலனாய்வு அதிகாரிகள், முட்டை வியாபாரிகள் உட்பட ஏனைய விற்பனையாளர்களை கைது செய்ய நுகர்வோர் விவகார அதிகார சபையால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் நிர்ணய விலையை விட அதிக விலைக்கு முட்டை விற்பனை செய்ததாக நாடு முழுவதும் 809 முட்டை விற்பனையாளர்கள் மற்றும் முட்டை உற்பத்தியாளர்கள் கைது செய்யப்பட்டு அவர்களில் 708 விற்பனையாளர்கள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளனர். (நி)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 180 | 200 | 200 |
| உருளைக்கிழங்கு | 170 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 250 | 400 |
| தக்காளி | 100 | 80 | 140 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 180 | 200 |
| கோவா | 180 | 180 | 200 | 250 |
| கரட் | 160 | 200 | 240 | 250 |
| பூசணி | 60 | 50 | 60 | 40 |
| புடோல் | 140 | 120 | 80 | 160 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 300 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 120 | 140 |
| பாகற்காய் | 400 | 400 | 250 | 300 |
| வெண்டக்காய் | 200 | 160 | 220 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 100 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 300 | 240 | 280 | 300 |
| பீற்றூட் | 240 | 150 | 200 | 200 |
| கறிமிளகாய் | 250 | 250 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 800 | 800 | 500 | 1000 |
| போஞ்சி | 250 | 200 | 250 | 300 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 450 | 350 | 350 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 70 | 70-90 |
| இராசவள்ளி | 350 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | -- | -- | -- | -- |
| முள்ளங்கி | 60 | 100 | 120 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 50 |
| ஈரப்பலா | 120 | -- | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகநூல் தரிசனம் 133

# கூலித்தொழிலாளியின் மகன் பிரபல தொழிலதிபரான கதை

யுத்த காலத்தில் எவ்வளவோ அற்புதங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஏழையாக இருந்தவன் லட்சாதிபதியாகி இருக்கிறான். லட்சாதிபதி பிச்சைக்காரனாகி இருக்கிறான். இதெல்லாம் வியாபாரத்தில் ஈடுபட்டுத்தான். ஆனால் போர் மூண்டதின் காரணமாக, ஒருவர் பெரிய கப்பல் கட்டும் முதலாளியாகவும் நிபுணராகவும் ஆனார் என்பது அதிசயமானது. அதிலும் கப்பல் தொழிலைப் பற்றியே தெரியாதவர் அப்படி ஆவதென்றால் நம்ப முடியுமா?

கப்பல் தொழிலில் பிரபலமாகியிருக்கும் அவருடைய பெயர் ஹென்றிஜே கெய்ஸர். அவருடைய தகப்பனார் ஜேர்மனிக்காரரர். ஆனால் அவர் தாய்நாட்டை விட்டு வெகுகாலத்துக்கு முன்னதாகவே அமெரிக்கா வந்து குடியேறி விட்டார். கெய்ஸர் பிறந்ததே அமெரிக்காவில்தான். தகப்பனார் செருப்பு தைக்கும் தொழிலைச் செய்து கொண்டிருந்தார். அத்தொழில் மூலமே அவருக்கு நிறையப் பணம் கிடைத்து வந்தது. கெய்ஸர் அவருக்கு ஒரே மகன். அக்காரணத்தால் மிகவும் செல்லமாகவே வளர்ந்தார்.

கெய்ஸருக்குப் இளமையிலிருந்தே அளவற்ற ஆசையும் எதிலும் சலிப்பின்றியுமிருந்தார். பதினாறு வயது வரை பள்ளியில் படித்தார். பிறகு நியூயார்க்கில் உள்ள ஒரு கம்பெனியில் வேலைக்குச் சேர்ந்தார். அங்கு, பொருட்களை வீடுகளுக்குக் கொண்டு கொடுக்கும் வேலை அவருக்கு அளிக்கப்பட்டது. கெய்ஸர் பகல் வேளைகளில் அலுவலகத்தில் வேலை செய்துகொண்டே இரவு வேளைகளில் போட்டோத் தொழிலைக் கற்றுக் கொள்ள முயற்சி செய்தார். போட்டோத் தொழிலில் ஒருவாறு முன்னேறிய பிறகு கெய்ஸர் மனதில் ஒரு புது யோசனை உதித்தது. பூந்தோட்டம், நீர்வீழ்ச்சி, பெரிய அழகான கட்டடங்கள் முதலியவற்றைப் படம் பிடித்து பல மாதிரிகளில் விற்றால் என்ன என்று யோசித்தார். உடனே அதைச் செய்ய முற்பட்டார். அவருடைய முயற்சிக்கு ஆரம்பத்திலேயே நல்ல வரவேற்பு ஏற்பட்டது. இதைக் கண்டு, கெய்ஸர் மனம் அளவற்ற குதூகலத்தில் மூழ்கியது. போட்டோத் தொழிலிலேயே பூரணமாக ஈடுபட எண்ணி கம்பனி வேலையை விட்டு விலகினார்.

அமெரிக்காவில் பல இடங்களில் போட்டோ பிடிக்கும் கம்பனிகளை நிறுவினார். இதன் மூலம் அவருடைய வருவாய் அதிகமாகியதுடன் பெயரும் பிரபலம் அடைந்தது. கெய்ஸர் அத்துடன் இருக்கவில்லை. அவர் போட்டோத் தொழிலை ஒருவாறாக நடத்த ஏற்பாடு செய்து முடிந்ததும் ஒரு சிமெண்ட் கம்பனியில் வியாபார ஏஜெண்டாக வேலையில் அமர்ந்தார். இக் கம்பனியில் அவர் திறமையாக வேலை பார்த்து, அதிக ஊதியம் பெற்றார். அவருக்குக் கிடைத்த ஊதியத்தை அவர் செலவு செய்யாமல் சிமெண்ட் மூட்டைகளை வாங்கி பத்திரப்படுத்தினார். அதைத் தனியே வியாபாரமும் செய்து வந்தார். இச்சமயத்தில் தான் சிமெண்டுக்கு அதிக கிராக்கி ஏற்பட்டது. அப்பொழுது அமெரிக்காவிலேயே கெய்ஸர் ஒருவரிடம்தான் அதிகமாக சிமெண்ட் இருந்தது. அதைப் பலர் விலைக்குக் கேட்டும் கெய்ஸர் விற்க மறுத்து விட்டார். கடைசியாக சிகாகோ நகரத்தைச் சேர்ந்த பிரபல கட்டட காண்டிராக்ட் கம்பனி ஒன்று அவரை தமது கம்பனியில் பங்குதரராகச் சேர்த்துக் கொண்டது. அக்கம்பனிக்கே கெய்ஸர் தாம் சேர்த்து வைத்திருந்த சிமெண்ட் மூட்டைகளை எல்லாம் நல்ல லாபத்திற்கு விற்றார். இக்கம்பனி மூலம் கெய்ஸர் கட்டட வேலைகளைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டார். பெரிய பெரிய அணைக்கட்டுகள் கட்டுவதற்கு காண்ராக்ட் எடுக்கச் சொல்லி, தாமே நேரில் இருந்து கட்டி முடித்தார். பிறகு அந்தக் கம்பனியிலிருந்து விலகி, சொந்தமாகவே கட்டட காண்ராக்ட் கம்பனியை ஆரம்பித்தார். இக் கம்பனி ஆரம்பத்தில் அதிக வசதிகள் பெற்றிருக்கவில்லை. ஆனாலும் கெய்ஸருடைய சலியா உழைப்பின் காரணமாக வெகு சீக்கிரத்திலேயே அது பிரபலம் அடைந்தது. அதிலிருந்து கப்பல் கட்டும் தொழிலை மேற்கொண்டார். அவர் கப்பல் கட்ட ஆரம்பித்த சமயமும் இரண்டாவது உலகப் போர் மூண்டதும் சரியாக இருந்தது. அதனால் கப்பல்களுக்கு அதிக கிராக்கி ஏற்படலாயிற்று. கெய்ஸர் மனத்தில் ஒரு புது யோசனை உதித்தது. சாதாரணமாக, கப்பல் கட்ட எல்லோரும் பின்பற்றும் வழியை அவர் கடைப்பிடிக்க விரும்பவில்லை. பழைய முறையினால் கப்பல் கட்டி முடிக்க அதிக நாட்கள் ஆகின்றன. போர்க் காலத்தில், தாமதமாக வேலை செய்வதால் அபாயம் அதிகரிக்கும். அதை தடுக்கப் புதுவழிகள் தேவை என்று கெய்ஸர் தீவிரமாகச் சிந்தித்தார். மோட்டார் தொழிற்சாலையில் ஒவ்வொரு பொருட்களையும் வெவ்வெறு இடங்களில் தயாரிப்பார்கள். பிறகு எல்லாவற்றையும் ஒரு இடத்துக்குக் கொண்டுவந்து பூட்டுவார்கள். அந்த முறையை இதில் பின்பற்ற கெய்ஸர் எண்ணினார். முதலில் இதற்கு பலத்த எதிர்ப்பு இருந்தது. பலர் அப்படி முடியவே முடியாது என்றும் கூறினர். ஆனால், கெய்ஸர் அதைப் பொருட்படுத்தாமல், தம் போக்கில் வேலையைச் செய்யலானார். சில மாதங்களிலேயே அவருடைய கப்பல் கட்டும் திறமை மிகப் பிரபலம் அடைந்தது. அமெரிக்க அரசாங்கமே அவருடைய புரட்சிகரமான யோசனையைக் கண்டு அதிசயித்தது.

கெய்ஸர் பல தொழிற்சாலைகள் நடத்தி வந்தார். பணம் அவரைத் தேடி வந்து குவிந்தது. ஆனாலும், அவர் சலியாமல் வேலை செய்து வந்தார். அவரைப் போலவே அவரிடம் வேலை செய்பவர்களும் சோம்பல் என்பதையே தெரியாதவர்களாக இருக்க வேண்டும். தன்னைப்போல் அவர்களும் முன்னுக்கு வரவேண்டும் என்று கெய்ஸர் விரும்புவார்.

# கால்நடைகள் திருடப்படுவதை கண்டித்து வலி. வடக்கில் போராட்டம் முன்னெடுப்பு

(அராலி)

**வலி.வடக்கு பகுதிகளில் கால்நடைகள் தொடர்ந்து திருடப்பட்டு வருவதை கண்டித்து காங்கேசன்துறை வீதி மல்லாகம் சந்தியில் கால்நடை வளர்ப்பாளர்கள் மற்றும் அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.**



வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்படும் மாடுகள் தொடர்ந்து திருடப்பட்டு வருவதை எதிர்த்தும் குற்றச்செயல்கள் குறித்து பொலிஸார் அக்கறையுடன் செயற்படுவதில்லை என தெரிவித்தும் குறித்த போராட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போராட்ட இடத்தில் பசு ஒன்றையும் கட்டி போராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டமானது மல்லாகத்தில் உள்ள காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத் திற்கு முன்னால் இடம்பெற்று காங்கேசன் துறை பொலிஸ் அத்தியட்சகரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது.

அதன் பின்னர் போராட்டமானது தெல்லிப் பழை பிரதேச செயலகத்திற்கு முன்னால் முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் தெல்லிப்பழை பிரதேச செயலரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது. (நி-6-33-104)

# சூட்சுமமான முறையில் முதிரை மரக் குற்றிகளை ஏற்றிச் சென்றவர் கைது



(தருமபுரம்)

மணலினால் மறைக்கப்பட்டு ஒரு தொகை முதிரை மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற டிப்பர் வாகனம் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப் படையினர் இணைந்து கடந்த சனிக்கிழமை வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட போது பூநகரியில் இருந்து யர்ழ்ப்பாணம் நோக்கி பயணித்த டிப்பர் வாகனத்தை சோதனையிட்ட போது குறித்த வாகனத்தில் மணலினால் மறைக்கப்பட்ட ஒரு தொகை முதிர மரக்குற்றிகள் மீட்கப்பட்டு வாகனத்தையும் பறிமுதல் செய்து சாரதியையும் கைது செய்துள்ளனர். (நி-6)

# ஒரே இலக்கத்தகட்டில் இரு வாகனங்கள் மணல் கடத்தலின் போது பறிமுதல்

(தருமபுரம்)

பரந்தனில் இருந்து அனுமதிப் பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிப் பயணித்த டிப்பர் வாக னம் ஒன்றும் அதேவேளை ஏ-9 வீதி யில் ஒரே இலக்கத் தகட்டினை கொண்டு பயணித்த இரண்டு டிப்பர் வாகனங்களையும் கடந்த சனிக் கிழமை பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

பறிமுதல் செய்யப்பட்ட டிப்பர் வாகனங்களை நீதிமன்ற நடவடிக்கைக்காக முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (நி-6)


**மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்க அங்கத்துவம் தொடர்பானது**

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய, மல்லாகம் மாவட்ட நீதிமன்ற வழக்கிலக்கம் நானாவிதம் 39/16 இன் 21.12.2021 ஆம் திகதிய கட்டளைக்கு அமைவாக ஆலய தர்மகர்த்தா சபைத் தேர்தல் நடைபெறவுள்ளது.

மருதடி விநாயகர் ஆலய வழிபடுவோர் சங்கத்தில் ஏற்கனவே உள்ள சாதாரண அங்கத்தவர்கள் தங்களது அங்கத்துவத்தினை அங்கத்துவப் பட்டியலில் உள்ளவாறு புதுப்பிப்பதற்கு ஏதுவாக, 26.04.2023 ஆம் திகதி தொடக்கம் 02.05.2023 ஆம் திகதி வரை (காலை 9.00 முதல் மாலை 4.15 மணிவரை) ஆலய அன்னதான மண்டபத்தில் கடமைக்காக நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்களிடம் தேசிய அடையாள அட்டையுடன் நேரடியாக வந்து சாதாரண அங்கத்தவர்கள் தங்களது வருட சந்தாவினை (2017 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரை) செலுத்துவதன் மூலம் தாங்கள் வாக்களிக்கும் உரிமையினை பெற்றுக் கொள்ளலாம் என்பதனை தயவுடன் அறியத் தருகின்றோம்.

**தேர்தல் குழு.** (சி-6426)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு றோயல் கல்லூரி
# க.பொ.த (சா/த) முதலாம் தவணைப் பரீட்சை வினாத்தாள்
# விஞ்ஞானம்


## பகுதி II

**பகுதி A யில் எல்லா வினாக்களுக்கும் பகுதி B யில் எவையேனும் 3 வினாக்களுக்கும் விடை எழுதுக.**

**பகுதி A கட்டமைப்பு வினாக்கள்.**

1. A. இயற்கை தந்த சிறந்த பரிசாக இயற்கை வளங்களைக் குறிப்பிடலாம். இயற்கை வளங்களின் திட்டமற்ற பாவனையால் மனிதன் பல இடர்பாடுகளை எதிர்கொள்கின்றான். நீர் மாசடைதல், வளி மாசடைதல், மண் மாசடைதல், மண் வளம் குன்றுதல், நோய்கள் பரவுதல் என்பவை இன்றைய காலத்தில் உலகளாவிய ரீதியில் எதிர்கொள்ளப்படும் சில பிரச்சினைகளாகும்.

இலங்கையில் பல்வேறு மாவட்டங்களிலுள்ள காடுகளின் பரம்பல் தொடர்பான வரைபு கீழே காட்டப்பட்டுள்ளது.




1. அநுராதபுரம்
2. முல்லைத்தீவு
3. பொலநறுவை
4. கண்டி
5. காலி

i. காடுகளின் பரம்பல் அதிகமாகவும் குறைவாகவும் காணப்படும் மாவட்டங்களைக் குறிப்பிடுக.
அதிகம்..................... குறைவு ..............................
ii. இவ்விரு மாவட்டங்களிலும் காடுகளின் பரம்பலிலுள்ள வித்தியாசத்தைக் கணிக்க.......................................................
iii. இயற்கை வளங்களின் திட்டமற்ற பாவனையால் ஏற்படக்கூடிய பந்தியில் குறிப்பிடப்பட்ட இரு பாதகமான விளைவுகளைக் குறிப்பிடுக.......................................................
iv. கடல் மாசடைதலுக்கான காரணம் ஒன்றினையும் அதனால் ஏற்படும் தீய விளைவு ஒன்றினையும் குறிப்பிடுக.................................
v. வளிமண்டலத்தின் நிலவுகைக்கு காடுகளின் பிரதான பங்களிப்பு யாது?.......................................................

B. இலங்கையில் கடல் நீரைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பிரதான கைத்தொழில் உப்பு உற்பத்தி ஆகும்.
i. உப்பளங்கள் அமைக்கத் தேவையான புவியியல் மற்றும் சூழலியல் காரணிகள் இரண்டு தருக.
.......................................................
ii. உப்பளங்களின் பின்வரும் பாத்திகளில் வீழ்படிவாகும் இரசாயனப் பதார்த்தங்களைக் குறிப்பிடுக.
பெரிய பாத்தி ..........................................
நடுத்தர அளவுடைய பாத்தி ..................................
சிறிய பாத்தி ..........................................
C. கீழ்வரும் அட்டவணையில் உள்ள இடைவெளிகளை நிரப்புக.

| கலவையின் கூறுகளைப் பிரித்தெடுக்கும் செயற்பாடு | பிரித்தெடுப்பு முறை |
|---|---|
| a. விசேடமாக அமைக்கப்பட்ட ஒடுங்கல் அரண் கோபுரங்களில் கலவை வெப்பமாக்கப்பட்டு கூறுகள் பிரித்தெடுக்கப்படும் | ................................ |
| b. ஒரு கரைப்பானில் சிறிதளவு கரையும் கரையமானது அதிகளவு கரையக்கூடிய இரண்டாவது கரைப்பானில் பிரித்தெடுக்கப்படும். | ................................ |
| c. கலவையிலுள்ள ஆவிப்பறப்பற்ற கூறுகள் விசேட காகிதத்தைப் பயன்படுத்தி பிரித்தெடுக்கப்படடல் | ................................ |

2. குறித்த ஒரு தொழிலை அல்லது பல தொழில்களை ஆற்றுவதற்காக சிறத்தலடைந்த பொதுவான உற்பத்தித் தோற்றுவாயைக் கொண்ட கலங்களின் கூட்டம் இழையம் எனப்படும்.
A. தாவர இழையங்கள் கட்டமைப்பு ரீதியாகவும் தொழிற்பாடு ரீதியாகவும் பின்வருமாறு வகைப்படுத்தப்படும்.




i. மேலுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான தாவர இழைய வகைகளை கீழே எழுதுக.
A. ..................................................
B. ..................................................
C. ..................................................
D. ..................................................
E. ..................................................
ii. இழையம் E இன் இயல்பு ஒன்றையும் தொழிற்பாடு ஒன்றையும் குறிப்பிடுக.
இயல்பு ..................................................
தொழில் ..................................................
iii. இலத்திரன் நுணுக்குக்காட்டியினூடாக அவதானிக்கப்பட்ட புடைக்கலவிழையக்கலம் ஒன்றிலுள்ள புன்னங்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. இடைவெளிகளை நிரப்புக.

| | புன்னங்கம் | தொழில் |
|---|---|---|
| a | கரு | .................................................. |
| | பச்சையவுருமணி | .................................................. |
| c | ........................ | சுரப்புப் பதார்த்தங்களை தொகுத்தலும் பொதியிடலும் |
| | ........................ | கலத்தினுள் நீர்ச்சமநிலை, விறைப்புத்தன்மையைப் பேணல் |

iv. இலையில் மாப்பொருள் உண்டா என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனையின் மூன்று பிரதான படிமுறைகள் கீழே தரப்பட்டுள்ளன. இவ் ஒவ்வொரு படிமுறைகளுக்குமான காரணத்தை எழுதுக.
a. இலையை நீரில் அவித்தல் ..........................................
b. இலையை மதுசாரத்தில் இட்டு நீர்த்தொட்டியில் வைத்து வெப்பமேற்றல்..........................................
C. பின்னர் இலையை எடுத்து அயடின் கரைசல் சில துளிகள் சேர்த்தல்..........................................

3. A. ஆவர்த்தன அட்டவணையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. தரப்பட்டுள்ள குறியீடுகள் நியமக் குறியீடுகள் அல்ல.
இவற்றைப் பயன்படுத்தி கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

| I | II | III | IV | V | VI | VII | VIII |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | F |
| | | | A | | | B | |
| | | D | G | | | | C |
| E | | | | | | | |

i. கீழே தரப்படும் விடயங்களுக்குப் பொருத்தமான குறியீட்டை எழுதுக.


| | | |
|---|---|---|
| a | முதலாம் அயனாக்கல் சக்தி கூடிய மூலகம் | |
| b | அல்லுலோகமாக இருந்த போதிலும் இதன் ஒரு பிறதிருப்பம் மின்னைக் கடத்தும் | |
| c | ஈரியல்புள்ள ஒட்சைட்டை உருவாக்கும் மூலகம் | |
| d | மின்னெதிர்த்தன்மை கூடிய மூலகம் | |
| e | இருவாயி,திரான்சிஸ்ரர் தயாரிக்க உதவும் மூலகம் | |

B. நைதரசன் வாயுவும் ஐதரசன் வாயுவும் தாக்கமுற்று அமோனியா வாயு உற்பத்தி செய்யப்படுகின்றது. கைத்தொழில் ரீதியாக ஏபர் முறையில் இவ் உற்பத்தி நடைபெறுகின்றது.
i. கீழே தரப்பட்ட சமன்பாட்டைச் சமப்படுத்துக.


$$N_2 + H_2 \longrightarrow NH_3$$

ii. மேலே கூறப்பட்ட முறையில் இவ் வாயுவின் உற்பத்தியை அதிகரிக்க கீழே உள்ள விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை எழுதுக.
a. தாக்கமுறும் வாயுக்களின் அமுக்கம் ..................................
b. .............................. ஊக்கியாகப் பயன்படுத்தப்படுகின்றது.
iii. மேலே தரப்பட்ட இரசாயனத் தாக்கத்தின் வகை யாது?
iv. அமோனியா மூலக்கூற்றின் புள்ளி புள்ளடிப்படத்தை வரைக.
v. குளுக்கோசின் இரசாயனச் சூத்திரம் $C_6 H_{12} O_6$ ஆகும்.
i. குளுக்கோசு மூலக்கூறு ஒன்றிலுள்ள காபன், ஐதரசன், ஒட்சிசன் அணுக்களின் எண்ணிக்கை யாது?
C. ......................... H ......................... O ............................

4. a. குறித்தவொரு பொருளின் இயக்கம் தொடர்பாக இடப்பெயர்ச்சி நேர வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




i. பின்வரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பொருளின் இயக்கம் பற்றி யாது கூறுவீர்?
A. AB ..........................................................
b. CA ..........................................................
ii. AB, CA இயக்கங்களுக்கிடையில் நீர் அவதானித்த பிரதான வேறுபாடு யாது?
..........................................................
iii. முதல் 10 செக்கன்களிலும் பொருளின் வேகத்தைக் காண்க.
..........................................................
iv. பொருள் சென்ற மொத்தத் தூரத்தையும் அடைந்த இடப்பெயர்ச்சியையும் தனித்தனியே கணிக்க.
..........................................................
B. i. கீழ்வரும் ABC பொருட்களில் தொழிற்படும் விளையுள் விசையைக் கணிக்க.




ii. சந்தர்ப்பம் B இல் உள்ள பொருளின் ஆர்முடுகலைக் கணிக்க.
..........................................................
C. மின்காந்தத் திருசியத்தின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

| A | B | கட்புலனாகும் ஒளி | புறஊதாக்கதிர் | C | காமாகதிர் |
|---|---|---|---|---|---|
| | | | | | |

a. மின்காந்த அலை வகைகளைக் கருத்திற் கொண்டு A B C க்குப் பொருத்தமான மின்காந்த அலைகளை எழுதுக
A.................................... B....................................
C....................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பகுதி B கட்டுரை வினாக்கள்.

5. A. அங்கிகள் அனைத்தும் தமது உயிர் வாழ்க்கைக்காக உணவில் தங்கியுள்ளன. அவை தமது உணவுத் தேவையைப் பல்வேறு வழிகளில் பூர்த்தி செய்கின்றன.
i. அங்கிகள் போசணையின் அடிப்படையில் இரண்டாக வகைப்படுத்தப்படும். அவற்றைப் பெயரிட்டு ஒவ்வொரு உதாரணம் தருக.
ii. பச்சைத் தாவரங்களில் நடைபெறும் உணவுற்பத்திச் செயன்முறை ஒளித்தொகுப்பு எனப்படும். இச் செயன்முறைக்கான சமப்படுத்தப்பட்ட இரசாயனச் சமன்பாட்டை எழுதுக.
iii. மாணவன் ஒருவன் பகல் வேளையில் நீரினுள் முற்றாக அமிழ்ந்துள்ள நீர்த்தாவரம் ஒன்றிலிருந்து வாயுக்குமிழிகள் வெளிவருவதை அவதானித்தான். அவன் அவ்வாயுவை சேகரித்து இனங்காண விரும்பினான்.
a. இவ்வாயுவை சேகரிப்பதற்குத் தேவையான உபகரண அமைப்பை வரைந்து பெயரிடுக.
b. இங்கு வெளிவிடப்படும் வாயு எது? இதனை எவ்வாறு இனங்காணலாம்?

B. உயிரின் உலகில் பாரிய பல்வகைமை காணப்படுகின்றது. இவற்றை வகைப்படுத்தவும் இனங்காணவும் விஞ்ஞானிகள் பல்வேறு காலப்பகுதியில் வெவ்வேறு முறைகளை அறிமுகப்படுத்தினர்.
i. அங்கிகளைப் பாகுபடுத்துவதனால் கிடைக்கும் நன்மை ஒன்று தருக?
ii. கார்ள் வூஸ் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்ட பாகுபாட்டு முறையில் அடங்கும் பேரிராச்சியங்கள் எவை?
iii. இராச்சியம் அனிமாலியாவில் அடங்கும் சில விலங்குகள் கீழே தரப்பட்டுள்ளன. காட்டுச்சேவல், கரப்பான், ஓணான், இழுதுமீன், நீரிஸ்புழு, கடற்குதிரை
a. மேலுள்ள விலங்குகளை முள்ளந்தண்டுளிகள், முள்ளந்தண்டிலிகள் என வகைப்படுத்துக.
b. முள்ளந்தண்டென்பு நிரலைக் கொண்டிருப்பது தவிர அனைத்து முள்ளந் தண்டுளிகளுக்குமான வேறொரு பொது இயல்பைத் தருக.
c. நீரிஸ்புழு அடங்கும் கணத்திலுள்ள விலங்குகளில் காணப்படும் பொது இயல்பு ஒன்று தருக.
C. பூக்கும் தாவரங்களிலுள்ள இலிங்க முறை இனப்பெருக்கத்திற்கான அங்கம் பூ ஆகும்.
i. பூவின் பெண்ணகப் பகுதியை வரைந்து பகுதிகளைப் பெயரிடுக.
ii. இழையவளர்ப்பு என்பது தாவரங்களின் செயற்கைப் பதியமுறை இனப்பெருக்க வகையாகும். இம்முறையின் அனுகூலம் ஒன்று தருக.

6. A. எம்மைச் சூழவுள்ள வளிமண்டலத்தில் காணப்படும் வளி வாயுக்களின் கலவையாகும். வளியிலுள்ள நைதரசன், ஒட்சிசன், காபனீரொட் சைட்டு என்பவை சதவீதங்களில் குறிப்பிடப்பட்ட போதிலும் ஐதரசன் வாயுவை சதவீதத்தில் குறிப்பிடுவது கடினம். ஏனெனில் வளிமண்டலத்தில் ஐதரசன் வாயு *ppm* அளவுகளிலேயே காணப்படுகின்றது.
i. வளிமண்டலத்தில் அதிகளவு காணப்படும் வாயு எது?
ii. அதன் சதவீதத்தைக் குறிப்பிடுக.
iii. அதன் பயன்பாடுகள் இரண்டு தருக்.
iv. ஒட்சிசன் வாயு என்பது இரண்டு ஒட்சிசன் அணுக்கள் சேர்ந்த மூலக்கூறாகும். ஒட்சிசன் மூலக்கூற்றின் சார்மூலக்கூற்றுத் திணிவைக் கணிக்குக. (0 இன் சாரணுத்திணிவு – 16)
v. ஆய்வுகூடத்தில் ஒட்சிசன் வாயுவைத் தயாரிக்கப் பயன்படும் இரசாயனச் சேர்வை ஒன்று தருக.
vi. நீர் கூறிய இரசாயனச் சேர்வையிலிருந்து ஒட்சிசன் வாயு பெறப்படும் தாக்கத்திற்கான சமப்படுத்தப்பட்ட சமன்பாட்டை எழுதுக.
B. சில உலோகங்களின் குறியீடுகள் கீழே தரப்பட்டுள்ளன.
i. இவற்றை தாக்குதிறன் அடிப்படையில் ஏறுவரிசைப்படி எழுதுக.
Ca, Fe, Al, Na, Mg, Zn, Pb
ii. மேலுள்ளவற்றில் குளிர்நீருடன் விரைவாகத் தாக்கம் புரியும் உலோகத்தைக் குறிப்பிட்டு இத்தாக்கத்திற்கான சமப்படுத்தப்பட்ட சமன்பாட்டையும் எழுதுக.
C. குறித்தவொரு இரசாயனத் தாக்கத்திற்காக $1 mol\ dm^{-3}$ , 250 ml NaOHகரைசல் தயாரிக்க வேண்டியுள்ளது.
சாரணுத்திணிவுகள் Na – 23 , O – 16 , H – 1
i. இக்கரைசலைத் தயாரிப்பதற்குத் தேவையான NaOH இன் திணிவைக் கணிக்க.
ii. இக்கரைசலைத் தயாரிப்பதற்குத் தேவையான கண்ணாடியினாலான இரண்டு ஆய்வுகூட உபகரணங்களைத் தருக.
iii. இக்கரைசல் நியமக் கரைசல் எனக் கூறப்படுகின்றது. இதனால் விளங்குவது யாது?
iv. நியமக்கரைசல் ஒன்று தயாரிப்பதற்கான செயற்பாடுகளை நான்கு படிமுறைகளாக எழுதுக.

7. A. மாணவக்குழு ஒன்றினால் தயாரிக்கப்பட்ட மின்சுற்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. மின்குமிழ் ஒவ்வொன்றினதும் தடை 3Ω ஆகும்.





i. E என்பது 5 மின்கலங்களைக் கொண்ட மின்கலவடுக்கு ஆகும். ஒவ்வொரு மின்கலத்தினதும் மின்னழுத்த வித்தியாசம் 1.5V ஆகும்.
a. மின்கலவடுக்கில் மின்கலங்கள் இணைக்கப்பட்டிருக்கும் முறை யாது?
b. மின்கலவடுக்கின் மொத்த மின்னழுத்த வித்தியாசம் யாது?
ii. மின்குமிழ் A , C பழுதடைந்தால் நீர் அவதானிக்கக்கூடிய மாற்றங்களைத் தனித்தனியே தருக.
iii. மின்குமிழ்களின் சமவலுத்தடை எவ்வளவு?
iv. —Ⓐ— எனக் குறிப்பிடப்பட்ட உபகரணத்தைப் பெயரிட்டு அதன் வாசிப்புக்களையும் குறிப்பிடுக.
v. LED என்பது ஒளிக்கு உணர்திறனுடைய தடையி ஆகும். ஒளிபடும் செறிவுக்கேற்ப அதன் தொழிற்பாடும் அமையும்.
a. ஒளிச்செறிவுக்கேற்ப LDR இன் தடை மாறுபடும் விதத்தைக் குறிப்பிடுக.
b. இவ்வகை விசேட தடையிகளை உருவாக்குவதற்குப் பயன்படும் இரசாயனப் பொருள் யாது?
B. பொருட்கள் வெவ்வேறு திரவங்களில் வெவ்வேறு நடத்தையைக் காட்டுகின்றன.
i. வெவ்வேறு பாயிகளில் பொருட்களின் நடத்தையை விளக்கும் ஆர்கிமிடிசின் விதியைக் குறிப்பிடுக.
ii. குறித்த ஒரு பொருளின் நிறை 20 N ஆகும். அப்பொருள் நீரினுள் முற்றாக அமிழ்ந்துள்ள போது தோற்ற நிறை 5N ஆகும்.
a. பொருள் மீது தொழிற்படும் மேலுதைப்பைக் கணிக்குக.
b. பொருள் முற்றாக நீரினுள் அமிழ்ந்துள்ள போது இடம் பெயர்க்கப்படும் நீரின் நிறை யாது?
c. ஆர்கிமிடிசின் விதிக்கமைய வடிவமைக்கப்பட்ட ஆய்வுகூட உபகரணம் நீரமானி ஆகும். அன்றாட வாழ்க்கையில் நீரமானியின் பயன்கள் 2 தருக.

8. A. உயிரின உலகில் புதிய அங்கியொன்றின் பிறப்பு என்பது முக்கிய நிகழ்வாகும்.
i. மனித இனப்பெருக்கத் தொகுதியில் ஆண், பெண் புணரிகளைக் குறிப்பிடுக.
ii. புணரியாக்கத்தின்போது நடைபெறும் கலப்பிரிவு வகை எது? இக் கலப்பிரிவின் பயன்பாடு ஒன்று தருக.
iii. பெண் இனப்பெருக்கத் தொகுதியில் நடைபெறும் இரண்டு தொழில்களைக் குறிப்பிடுக.
iv. பெண்ணின் மாதவிடாய்ச் சக்கரத்தைக் கட்டுப்படுத்தும் கபச்சுரப்பியினால் சுரக்கப்படும் ஓமோன் ஒன்றை எழுதுக.
B. காலில் ஏற்பட்ட சிறு காயம் ஒன்றிலிருந்து வெளியேறிய பெருமளவு குருதியினால் சிறுவன் ஒருவனுக்கு உயிரிழப்பு ஏற்பட்டது. இதற்கான காரணம் இலிங்கமிணைந்த பின்னடைவான பரம்பரையலகு எனக் கண்டறியப்பட்டது.
i. இலிங்கமிணைந்த பின்னடைவான பரம்பரையலகினால் ஏற்பட்ட இந்நோய் நிலைமை யாது?
ii. இந்நோய் நிலைமைக்குக் காரணமான பின்னடைவான பரம்பரையலகு "h" எனின் இச்சிறுவனின் நோய்க்குரிய பிறப்புரிமை அமைப்பை எழுதுக.
iii. இலிங்கமிணைந்த பின்னடைவான பரம்பரையலகினால் ஏற்படக்கூடிய பிறிதொரு நோயைக் குறிப்பிடுக.
C. ஒளிக்கதிர்கள் ஒளித்தெறிப்புக்கும் ஒளி முறிவுக்கும் உட்படுகின்றன.
i. ஒளித்தெறிப்பு விதி இரண்டையும் எழுதுக.
ii. தளவாடி ஒன்றின் முன்னால் 1m தூரத்தில் வைக்கப்பட்ட பொருள் ஒன்றின் விம்பத்திற்கும் பொருளுக்குமிடையினான தூரம் எவ்வளவு?
iii. தள்வாடியில் தோன்றும் விம்பத்தின் இயல்பு இரண்டு தருக.
iv. பெயர்ச்சுட்டி ஒன்றிலுள்ள சிறிய எழுத்துக்களை வாசிப்பதற்கு கைவில்லை பயன்படுத்தப்படுகின்றது.
a. கைவில்லையில் காணப்படும் வில்லையின் வகை யாது?
b. பெயர்ச்சுட்டியிலுள்ள சிறிய எழுத்துக்களைப் பெரிதாக்கிப் பார்ப்பதற்கு வில்லையின் எவ்விரு புள்ளிகளுக்கிடையில் பெயர்ச்சுட்டி வைக்கப்பட வேண்டும்.
C. கைவில்லையைக் கொண்டு சூரிய ஒளியில் உலர்ந்த பஞ்சு ஒன்றை எரியச் செய்யும் சந்தர்ப்பத்தில் ஒளிக்கதிரின் பாதையை விளக்கும் கதிர்வரைபடத்தை வரைக.

9. A. ஒரே மூலகத்தின் வெவ்வேறு திணிவெண்ணைக் கொண்ட அணுக்கள் சமதானிகள் எனப்படும்.

$$^{1}_{1}H$$

ஐதரசன் அணுவில் மூன்று சமதானிகள் காணப்படுகின்றன. அதில் ஒன்று மேலே தரப்பட்டுள்ளது.
i. மேலே கூறப்பட்ட ஐதரசன் சமதானியின் பெயர் யாது?
ii. இவ் அணுவிலுள்ள புரோத்தன், இலத்திரன், நியூத்திரன் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.
iii. a. மக்னீசியத்தின் சாரணுத்திணிவு 24 ஆகும். 12g மக்னீசியத்தின் மூல் எண்ணிக்கை யாது?
b. நீர் கூறிய மூல் எண்ணிக்கையில் காணப்படும் மக்னீசிய அணுக்களின் எண்ணிக்கை எவ்வளவு?
iv. மக்னீசியம் வளியில் எரிக்கப்படும் போதான இரசாயனத் தாக்கத்தின் சமப்படுத்தப்பட்ட சமன்பாட்டை எழுதுக.
v. 120g மக்னீசியம் வளியில் முற்றாக எரிக்கப்படும் போது தோன்றும் மக்னீசியம் ஒட்சைட்டின் திணிவைக் காண்க.
(Mg – 24 o – 16)
B. இசைக்கவை ஒன்றினால் எழுப்பப்பட்ட ஓர் அலையின் கதோட்டுக் கதிர் அலைவுகாட்டியில் தென்பட்ட வரைபு கீழே தரப்பட்டுள்ளது.




i. மேலும் படத்தில் X,Y எனக் குறிப்பிடப்படுபவை யாவை?
ii. இவ் அலை தோன்றுவதற்கு 2 செக்கன்கள் எடுத்தது எனின் மீடிறனைக் கணிக்க.
iii. வளியில் ஒலியின் வேகம் $330 ms^{-1}$ எனில் X இன் பெறுமானம் யாது?
iv. மேலே காட்டப்பட்ட அலை மின்காந்த அலையிலிருந்து வேறுபடுவதற்கான இரண்டு காரணங்களைத் தருக.
v. பியானோ, வயலின் ஆகிய இரு இசைக்கருவிகளிலும் ஒரே மீடிறனுடைய ஒலி எழுப்பப்பட்ட போதிலும் அவற்றை வேறுபடுத்தி அறியக் கூடியதாகவுள்ளது. இதற்குக் காரணமான ஒலியின் சிறப்பியல்பு யாது?
vi. நரம்புக்கருவிகளில் ஒலியின் மீடிறனை மாற்றுவதில் செல்வாக்குச் செலுத்தும் இரு காரணிகளைக் குறிப்பிடுக.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் புத்தாண்டுப் பலன்கள்

## 14.04.2023-13.04.2024

## பெற்றோர்களால் சகல நன்மைகளும் கிடைக்கும்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



**செய்யும் தொழிலே தெய்வம் என்று சொல்லும் கும்ப இராசி வாசகர்களே!**

வரவறிந்து செலவு செய்ய வேண்டுமென்று சொல்லும் உங்களுக்கு இந்த சோபகிருது புத்தாண்டின் தொடக்கமே ஜென்மச் சனியாக அமைகின்றது. அதே நேரம் தனாதிபதி குரு, தன ஸ்தானத்திலேயே வலிமை பெற்றிருக்கின்றார். எனவே எண்ணங்கள் எளிதில் நடைபெறும். சிறுசிறு பிரச்சினைகளும் மனக்கிலேசங்களும் இடையிடையே ஏற்படத்தான் செய்யும். தைரியமும் தன்னம்பிக்கையும் தக்க விதத்தில் உங்களுக்கு உறுதுணைபுரியும். ஏப்ரல் 22 ஆம் திகதி குரு பகவான் மேஷ இராசிக்கு செல்கின்றார். சகாய ஸ்தானத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது ஜென்மச் சனியால் ஏற்படும் சிக்கல்களுக்கு விடிவு காலம் பிறக்கும். வழக்குகள் சாதகமாக முடியும். வருமானப் பற்றாக்குறை அகல புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். வருடத் தொடக்கத்தில் உள்ள கிரக நிலைகளைப் பார்க்கும் பொழுது 3 இல் ராகுவும் 9 இல் கேதுவும் இருக்கின்றார்கள். எனவே உடன்பிறப்புகளின் ஒத்துழைப்பு குறையலாம். ஊர் மாற்றம் மற்றும் உத்தியோக மாற்றம் எதிர்பார்த்தபடியே அமையலாம். பொதுவாழ்வில் உள்ளவர்கள் மேலிடத்தை அனுசரித்துச் செல்வது நல்லது. புத்தாண்டில் 3 முறை சனி, செவ்வாயின் பார்வை ஏற்படுகின்றது. அப்பொழுது கட்டுக்கடங்காத விரயங்கள் ஏற்பட்டு கவலையைக் கொடுக்கும். அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. உடல்நலத்திற்கென்று ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலையும் உண்டு. 08.10.2023 அன்று மீன இராசிக்கு ராகு செல்கின்றார். அதே நேரம் கன்னி இராசிக்கு கேது வருகின்றார். இந்த மாற்றங்களின் அடிப்படையில் தான் பலன்கள் வந்து சேரப்போகின்றது. இவைகள் பொதுப் பலன்கள் என்பதால் சுய ஜாதகத்தில் திசாபுத்திகள் பலம்பெற்று நடைபெற்றால் உங்கள் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். திசாபுத்தி பலம் இழந்திருந்தால் இனத்தார் பகையும் இல்லத்தில் கொந்தளிப்பும் உருவாகும். அப்படிப்பட்டவர்கள் யோகபலம் பெற்ற நாளில் முறையான இறை வழிபாடு செய்வதன் மூலம் வளர்ச்சியைப் பெறலாம்.

### குருப்பெயர்ச்சி!

சித்திரை 9 ஆம் திகதி (22.04.2023) அன்று மேஷ இராசிக்கு குரு பகவான் வருகின்றார். உங்கள் இராசிக்கு 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு பகவான். அவர் சகாய ஸ்தானத்திற்கு வரும் நேரம் படிப்படியாக நன்மைகள் வந்து சேரும். உங்கள் இராசிக்கு 7, 9, 11 ஆகிய மூன்று இடங்களையும் குரு பார்க்கப் போகின்றார். எனவே கல்யாண முயற்சிகள் கைகூடும். விலகியிருந்த உறவினர்கள் விரும்பி வந்திணைவர். பிள்ளைகளின் திருமணங்களை சிறப்பாக நடத்தும் சூழ்நிலை உண்டு. வெளிநாட்டிலிருந்து அனுகூலமான தகவல் கிடைக்கும். சிலருக்கு பதவி உயர்வின் காரணமாக வெளியூர் வாய்ப்புகள் வரலாம். குருவின் பார்வை 9 ஆம் இடத்தில் பதிவதால் பொன், பொருட்கள் பெருகும். போட்ட திட்டங்கள் நிறைவேறும். அன்பு நண்பர்கள் உங்கள் அருகிலிருந்து வளர்ச்சிக்கு வழிகாட்டுவர். நடக்காது என்று நினைத்திருந்த காரியங்கள் கூட நடப்பது கண்டு ஆச்சரியப்படுவீர்கள். பெற்றோர்களால் சகல நன்மைகளும் கிடைக்கும். பூர்வீக சொத்துக்களைப் பிரித்துக் கொள்வதில் இருந்த பிரச்சினைகள் மாறும். அண்ணன், தம்பிகளுக்குள் இருந்த அரசல் புரசல்கள் மாறி பாகப் பிரிவினைக்கு சம்மதிப்பர். உத்தியோகத்தில் உங்கள் கருத்துக்களை மேலதிகாரிகள் ஏற்றுக்கொண்டு செயற்படுவர். லாப ஸ்தானத்தை குரு பார்ப்பதால் தொழில் வளர்ச்சி திருப்தி தரும். எதிர்பார்த்ததைக் காட்டிலும் கூடுதல் லாபம் கிடைக்கும். ஆயினும் ஏழரைச் சனி நடைபெறுவதால் சேமிக்க இயலாது. முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைக்கும் இந்த நேரத்தில் புதியவர்களை நம்பித் தொழிலை விரிவு செய்ய வேண்டாம். அரசு வழிச்சிக்கல்களைச் சந்திக்கும் சூழ்நிலையும் உண்டு.

### கும்பச் சனி

கிரகங்களில் வலிமை வாய்ந்த சனி பகவான் உங்கள் இராசிநாதனாகத் திகழ்பவர். அவர் ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கின்றார். ஏழரைச் சனியில் ஜென்மச் சனியின் ஆதிக்கம் நடைபெறுவதால் சிக்கல்களும் சிரமங்களும் திடீர், திடீரென வந்து சேரும். உறவினர் பகை உருவாகி உள்ளத்தை வாட வைக்கும். "நினைத்தது ஒன்றும் நடந்தது ஒன்றுமாக இருக்கிறதே" என்று கவலைப்படுவீர்கள். பணிபுரியும் இடத்தில் நிம்மதி இருக்காது. பொருளாதாரத்தில் இருந்த சரள[illegible] நோக்கி செல்[illegible] செயற்படுவதோடு தெய்வ வழிபாடும் தேவை. கும்பத்தில் சஞ்சரிக்கும் சனி, இடையில் வக்கிரமும் பெறுகின்றார். பின்னர் 24.08.2023 இல் மகரத்திற்கு வந்தும் சனி வக்கிரம் பெற்று வருகின்றார். அங்கிருந்து மீண்டும் 20.12.2023 இல் கும்ப இராசிக்கு முறையாகப் பெயர்ச்சியாகின்றார். இந்த வக்கிர காலத்தில் உடல்நலத்தில் கவனம் தேவை. உள்ளத்தில் நல்லதையே நினைத்துக் கவனத்தோடு செயற்படுவது நல்லது. எந்தச் செயலிலும் தாமதம் ஏற்படுமே தவிர கடைசி நேரத்தில் காரியங்கள் கைகூடிவிடும். காரணம் உங்கள் இராசிநாதனாக விளங்குபவர் சனி பகவான் அல்லவா. அவர் அளவோடு துயரத்தைக் கொடுப்பாரே தவிர, அவரை வழிபட்டால் வளர்ச்சியையும் தருவார். அதேநேரத்தில் அலுவலகப் பணிகளில் கவனமாக இருப்பது நல்லது. எத்தகைய சம்பவத்திலும் உணர்ச்சி வசப்பட வேண்டாம்.




### ராகு-கேது பெயர்ச்சி

08.10.2023 அன்று மீன இராசியில் ராகுவும் கன்னி இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் இராசிக்கு 2 ஆம் இடத்திற்கு ராகு வருகின்றார். அஷ்டமத்திற்கு கேது வருகின்றார். 2 இல் ராகு வருவதால் பொருளாதாரத்தில் இருந்த பற்றாக்குறை அகலும். குடும்பத்தில் மகிழ்ச்சிகரமான சம்பவம் நடைபெறும். எதிர்காலத்தை இனிமையாக்கிக் கொள்ள புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் சம்பள உயர்வுடன் கூடிய இடமாற்றத்தைக் காண நேரிடும். நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்துசேர்ப்பர். சொத்துக்களாலும் சொந்தங்களாலும் அனுகூலம் உண்டு. 8 ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் கேதுவால் அலைச்சல் அதிகரித்தாலும் ஆன்மிகத்திற்காக ஒரு தொகையைச் செலவிட்டு மகிழ்வீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி விரயங்களை சுபவிரயமாக்கிக் கொள்வது நல்லது. "வாகனங்களை மாற்ற[illegible]" [illegible] சிந்தனையும், "புதிய [illegible] வாங்கலாமா?" என்ற எண்ணமும் உருவாகும். உறவினர்களிடம் பழகும் பொழுது கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது. இக்காலத்தில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்தால் ஏற்ற, இறக்கமில்லாத வாழ்க்கை அமையும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு!

புத்தாண்டில் புதிய திருப்பங்கள் ஏற்பட செவ்வாய் தோறும் வராஹி அம்மனை வழிபடுவது நல்லது.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் விரயச் சனி விலகி ஜென்மச் சனியாக நடைபெறுவதால் சென்ற ஆண்டைக் காட்டிலும் விரயம் குறைவாகவே இருக்கும். வருமானம் திருப்தி தரும். ஆரோக்கியத்தில் மட்டும் அக்கறை எடுத்துக் கொள்ளுங்கள். கணவன்-மனைவிக்குள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்படுவதன் மூலமே புதிய பாதை அமைத்துக் கொள்ள இயலும். சகோதர வர்க்கத்தினர் உங்கள் எண்ணங்களைப் புரிந்து கொண்டு செயற்படுவர். ராகு-கேது பெயர்ச்சிக்குப் பிறகு விரயங்கள் ஏற்படலாம். வீண் விரயங்கள் அகல சுபவிரயங்களை மேற்கொள்ளுங்கள். பணிபுரியும் பெண்களுக்கு இனிமை தரும் விதத்தில் இடமரற்றம் வரலாம்.

### குரு-சனி வக்கிரம்

12.09.2023 முதல் 20.12.2023 வரை மேஷத்தில் குரு வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிக்கு தன லாபாதிபதியானவர் குரு பகவான். அவர் வக்கிரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பொருளாதாரத்தில் சிக்கல்கள் ஏற்படலாம். புதியவர்களை நம்பிச்செய்யும் முயற்சிகளில் ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும். வர்த்தக ஒப்பந்தங்களில் யோசித்துக் கையமுத்திடுவது நல்லது. வங்கிக் காசோலைகளை கவனத்தோடு பயன்படுத்த வேண்டும். தொழிலில் புதிய முதலீடுகள் செய்து அகலக்கால் வைக்க வேண்டாம். 27.06.2023 முதல் 23.08.2023 வரை கும்ப இராசியிலும் பிறகு 24.08.2023 முதல் 23.10.2023 வரை மகரத்திலும் சனி வக்கிரம் பெறுகின்றார். இந்த வக்கிர காலத்தில் எதிலும் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுவது நல்லது. மனக்கலக்கம் அதிகரிக்கும். பணிவும் பாசமும் உங்கள் செயற்பாட்டில் இருந்தால் இனிய சூழ்நிலை இல்லத்தில் அமையும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளுடன் மோதல்கள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். புது முயற்சியில் அவசரம் காட்ட வேண்டாம். சனி இராசிநாதனாக் இருப்பதால் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 161





எல்லோரும் ஒருமுகமாக உன் மருமகன் மதுராந்தகனே அடுத்த பட்டத்துக்கு உரியவன் என்று ஒப்புக் கொண்டார்கள். ஜயகோஷத்துடன் ஆமோதித்தார்கள். நியாயத்துக்குக் கட்டுப்படவில்லையென்றால் கத்தி எடுத்துப் போர் செய்து உரிமையை நிலைநாட்டவும் அவ்வளவு பேரும் சித்தமாயிருக்கிறார்கள். கொல்லி மழவனும் வணங்காமுடி முனையரையனும் கூட ஒப்புக் கொண்டார்கள் என்றால், நம்முடைய நோக்கம் நிறைவேறுவதற்குத் தடை என்ன? சம்புவரையர் தம் கோட்டை, கொத்தளம், படை, செல்வம் எல்லாவற்றையும் ஈடுபடுத்தச் சித்தமாயிருக்கிறார். அவருடைய மகன் கந்தமாறன் மிகத் தீவிரமாயிருக்கிறான். நடுநாட்டையும் திருமுனைப்பாடி நாட்டையும் பற்றிக் கவலையேயில்லை. சோழ தேசம்தான் எப்போதும் நம் கையில் இருக்கிறது. வேறு என்ன யோசனை? திருக்கோவலூர் மலையமான், பல்லவன் பார்த்திபேந்திரன், கொடும்பாளூர் வேளான் இந்த மூன்று பேருந்தான் ஒருவேளை எதிர்க்கக் கூடும். அவர்களில் கொடும்பாளூரான் இங்கில்லை. இலங்கையில் இருக்கிறான். மற்ற இருவராலும் என்ன புரட்டிவிட முடியும்? கூடிய சீக்கிரத்தில் சக்கரவர்த்தியிடம் சொல்லி உடனே முடிவு செய்துவிட வேண்டியது தான்!" என்றார் பெரியபழுவேட்டரையர்.

"தலைவர்களைப் பற்றித் தாங்கள் சொல்வதெல்லாம் சரி ஜனங்கள்? ஜனங்கள் ஆட்சேபித்தால்?" என்று கேட்டார் காலாந்தககண்டர்.

"ஆகா! ஜனங்களை யார் கேட்கப் போகிறார்கள்? ஜனங்களைக் கேட்டுக் கொண்டா இராஜ்ய காரியங்கள் நடக்கின்றன? ஜனங்கள் ஆட்சேபிக்கத் துணிந்தால், மறுபடியும் அவர்கள் இம்மாதிரி காரியங்களில் பிரவேசிக்காதபடி செய்துவிட வேண்டும். அப்படி ஒன்று நேரும் என நான் நினைக்கவில்லை. சக்கரவர்த்தியின் விருப்பம் என்றால் பேசாமல் அடங்கி விடுவார்கள். மேலும், அருள்மொழிவர்மன் நல்லவேளையாக இலங்கையில் இருக்கிறான். அவன் இருந்தாலும் ஒருவேளை ஜனங்கள் தங்கள் குருட்டு அபிமானத்தைக் காட்ட முயல்வார்கள். ஆதித்த கரிகாலன் மீது ஜனங்கள் அவ்வளவு பிரேமை கொண்டிருக்கவில்லை. மதுராந்தகன் மீது அவர்களுடைய அபிமானத்தைத் திருப்புவது சுலபம். 'சிவபக்தன்', 'உத்தம குணம் படைத்தவன்' என்று ஏற்கெனவே பெயர் வாங்கியிருக்கிறான். சுந்தர சோழரின் புதல்வர்கள் இருவரைக் காட்டிலும் உன் மருமகனுடைய முகத்தில் கலை அதிகம் என்பதுதான் உனக்குத் தெரியுமே? 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்' என்று கருதும் முட்டாள் ஜனங்கள் 'மதுராந்தக சக்கரவர்த்தி வாழ்க' என்று கோஷிக்காவிட்டால்தான் ஆச்சரியமாயிருக்கும். எப்படியிருந்தாலும் நான் ஒருவன் இருக்கும் போது உனக்கு என்ன கவலை.?"

"ஆனால் வேளக்காரப் படை இருக்கிறதே! அவர்களை எப்படிச் சமாளிப்பது?"

"வேளக்காரப் படையார் சுந்தர சோழருக்குத்தான் உயிர்ப் பலி விரதம் எடுத்தவர்களே தவிர, அவருடைய பிள்ளைகளுக்கு அல்லவே? அப்படி அவர்கள் குறுக்கிட்டாலும் உன்னுடைய கோட்டைக் காவல் படை எங்கே போயிற்று? ஒரு நாழிகைப் பொழுதில் அவ்வளவு பேரையும் பிடித்துப் பாதாளச் சிறையில் தள்ள வேண்டியதுதானே?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## குருவி கொடுத்த விதை

ஓர் ஊரில் பெரிய பண்ணையார் ஒருவர் இருந்தார். அந்த ஊரில் இருந்த பெரும்பாலான நிலங்கள் அவருக்குத் தான் சொந்தம்.

அவரிடம் முனியன் என்ற உழவன் வேலை பார்த்து வந்தான். அவனுக்குக் குடிசை ஒன்றும் சிறிதளவு நிலமும் இருந்தன.



பண்ணையாரிடம் வந்த அவன், "ஐயா! எல்லா நிலத்திலும் உழுது விதை நட்டு விட்டார்கள். என் நிலம் மட்டும் தான் வெறுமனே உள்ளது. நீங்கள் சிறிது தானியம் தாருங்கள். என் நிலத்திலும் விதைத்து விடுகிறேன்" என்றான்.

" என் நிலத்திலேயே உழுது பயிரிடு. சொந்தமாகப் பயிரிட வேண்டாம். பண்ணையாராகும் ஆசையை விட்டு விடு. கூலியாளாகவே இரு. அரை வயிற்றுக் கஞ்சியாவது கிடைக்கும்." என்று கோபத்துடன் சொன்னார் அவர்.

சோகத்துடன் வீடு திரும்பினான் அவன். தன் மனைவியிடம், "நாம் வளம் பெறுவது பண்ணையாருக்குப் பிடிக்கவில்லை. தானியம் தர மறுத்து விட்டார். நீயும் நம் குழந்தைகளும் எப்போதும் போலப் பட்டினி கிடக்க வேண்டியதுதான். இது தான் நம் தலைவிதி" என்று வருத்தத்துடன் கூறினான்.

அவர்கள் குடிசையில் குருவி ஒன்று கூடு கட்டியது.

இதைப் பார்த்த அவன் மனைவி "நம் குடிசை புயலுக்கும் மழைக்கும் எப்பொழுது விழுமோ என்று நாம் அஞ்சுகிறோம். இங்கு வந்து குருவி கூடு கட்டுகிறது பாருங்கள்" என்று கணவனிடம் சொன்னாள்.

"பாவம்! வாய் பேச முடியாத உயிர் அது. நிலைமை புரிந்தவுடன் அதுவே இங்கிருந்து போய்விடும். நாம் அதற்குத் தொல்லை செய்ய வேண்டாம்" என்றான் அவன்.

கூட்டில் அந்தக் குருவி நான்கு முட்டைகள் இட்டன. நான்கும் குஞ்சுகளாயின.

திடீரென்று அந்தக் குருவிக் கூட்டுக்குள் ஒரு பாம்பு நுழைந்தது. குருவிக் குஞ்சுகளைப் பிடித்துச் சாப்பிடத் தொடங்கியது. அவை அலறின.

அங்கு வந்த உழவன் பாம்பை அடித்துக் கொன்றான். அதற்குள் அது மூன்று குஞ்சுகளைத் தின்று விட்டது. தரையில் விழுந்த ஒரு குஞ்சு மட்டும் உயிரோடு இருந்தது.

அதை அன்போடு எடுத்தான் அவன். அதன் கால் உடைந்திருப்பதைக் கண்டு அதற்குக் கட்டுப் போட்டான். அதை மீண்டும் கூட்டில் வைத்தான். வேளா வேளைக்கு உணவு தந்தான்.

சில நாட்களில் அந்தக் குருவியின் கால்கள் சரியாயின

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை.

– காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எதிர்ப்பை வெளிப்படுத்தும் அஹிம்சை வழி உபாயம்

இன்று 25.04.2023 செவ்வாய்க்கிழமை தமிழர் தாயகமெங்கும் பூரண ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்க் கட்சிகள் விடுத்த மேற்போந்த அழைப்புக்கு அனைத்து தொழிற்சங்கங்களும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இதில் முஸ்லிம் அரசியல் கட்சிகள் சிலவும் ஆதரவு வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வடக்குக் கிழக்கு உள்ளடங்கிய தமிழர் தாயகத்தில் தொடர்ச்சியாக இடம்பெறும் சிங்கள பௌத்த மயமாக்கல் மற்றும் புதிதாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் என்பனவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று பூரண கதவடைப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான எதிர்ப்பு இன்று மட்டும் நடப்பதல்ல. பேரினவாதிகளிடம் இலங்கையின் ஆட்சி அதிகாரம் எப்போது சென்றதோ அன்றிலிருந்து சிங்களப் பேரினவாதிகள் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயற்படத் தொடங்கினர்.

அந்நாளிலிருந்து தமிழ் மக்கள் அஹிம்சை வழியில் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

சத்தியாக்கிரகப் போராட்டங்கள், பாதயாத்திரைகள், கதவடைப்புகள் என பல்வேறு வழிகளில் தமிழ் மக்கள் தங்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தி வந்துள்ளனர்.

எனினும் தமிழ் மக்களின் அகிம்சை வழிப் போராட்டத்தை சிங்கள பேரினவாத ஆட்சியாளர்கள் ஒருபோதும் கவனத்தில் எடுக்கவில்லை.

இந்தநிலையில்தான் ஆயுதப் போராட்டத்தை தமிழ் இளைஞர்கள் முன்னெடுக்கின்றனர்.

நீண்ட நெடுங்காலம் ஆயுதப் போராட்டம் நீடிக்கிறது.

சிங்கள ஆட்சியாளர்கள் மீதான அவநம்பிக்கைகள் காரணமாக தனிநாடு தவிர்ந்த இடைநிலைத் தீர்வை ஏற்க முடியாத ஒரு சூழ்நிலைக்கு தமிழ் மக்கள் ஆளாகின்றனர்.

அதேநேரம் உலக மயமாதல் என்ற நிலைமாறு சூழமைவு ஏற்பட, அதன் முதற்கட்டம் ஆயுதப் போராட்டம் நடத்துகின்ற இயக்கங்களை முடிவுக்குக் கொண்டுவருகின்ற தீர்மானத்தை உலக நாடுகள் தம்மளவில் எடுத்துச் கொள்கின்றன.

இதற்கு ஏகப்பட்ட புறவயக் காரணங்களும் உண்டு.

எதுவாயினும் எங்களின் ஆயுதப் போராட்டம் மௌனித்துவிட, அதனைத் தமக்குச் சாதமாக்கிக் கொண்ட சிங்களப் பேரினவாதம், வடக்குக் கிழக்கு உள்ளிட்ட தமிழர் தாயகத்தில் பௌத்த சிங்கள அடையாளங்களை வலிந்து ஏற்படுத்தி, வடக்குக் கிழக்கு தமிழர் தாயகம் அல்ல என்பதை நிரூபிக்க முற்பட்டுள்ளது.

இந்தநிலைமையானது போருக்குப் பின்பாக வேகமெடுத்துள்ளதை அவதானிக்க முடியும்.

இதற்கும் மேலாக, மக்களின் உரிமைப் போராட்டங்களை அடக்கும் நோக்குடன் புதிய சட்டங்களை இயற்றுவதிலும் ஆட்சிப்பீடம் வேகமாகச் செயலாற்றுகிறது.

இத்தகைய சூழ்நிலையில் இலங்கை அரசாங்கத்தின் மேற்போந்த செயல்களைக் கண்டிப்பதும் அதற்குத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தும் வகையிலும் இன்றைய பூரண கதவடைப்புப் போராட்டம் நடைபெறுகிறது.

இப்போராட்டம் ஏதோவொரு வகையில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாக இருக்கும் என்பது நிறுதிட்டமான உண்மை.

# அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து சஜித் தலைமையில் புதிய கூட்டணி

## லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

அனைத்து எதிர்க்கட்சிகளும் ஒன்றிணைந்து சஜித் பிரேமதாச தலைமையில் புதிய கூட்டணி ஒன்றை ஆரம்பிக்க இணக்கம் தெரிவித்துள்ளதாக எதிர்க் கட்சியின் பிரதம அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து முன்னெடுத்திருந்த கலந்துரையாடலில் இந்த இணக்கம் ஏற்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே லக்ஸ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்திருந்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்திற்கு எதிராக வாக்களிப்பதற்கு எதிர்கட்சிகளின் தலைவர்கள் ஒப்புக் கொண்டுள்ளனர். இன்று(நேற்று) நாம் கலந்துரையாடினோம். சஜித் பிரேமதாச தலைமையில் பாரிய எதிர்கட்சி கூட்டுக் கூட்டணி. எதிர்க் கட்சியில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் கலந்து கொண்டிருந்தன. சகல கட்சிகளும் நூறு வீதம் ஒத்துக்கொண்டன. எதிர்க்கட்சியில் இருக்குமாறு கூறியுள்ளனர் எமக்கு வாக்களித்த மக்கள், தேசிய அரசாங்கத்திற்கு ஆணை வழங்கவில்லை. அதனாலேயே எதிர்க்கட்சியில் இருக்கின்றோம். இந்த கூட்டணி அடுத்த ஜனாதிபதி தேர்தல் வரை நீடிக்கும் எனவும் தெரிவித்தார்.(ம-7,9)

# நீர் மட்டம் குறைந்துள்ளதால் மின்சார உற்பத்தி பாதிப்பு

## எரிசக்தி அமைச்சு தெரிவிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அருகில் உள்ள நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 30.8 சதவீதமாக குறைந்துள்ளதாகவும் இதனால் நாட்டின் மின்சார உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. நாளாந்த மின்சாரத் தேவை அதிகரித்துள்ளதுடன், மணித்தியாலத்திற்கு 45.2 ஜிகாவாட்களை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறைந்த நீர்மட்டம் நாட்டின் மின் உற்பத்தியை பாதித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக காசல்ரீ, கொத்மலை மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கங்களில் மிகக் குறைந்த நீர்மட்டம் பதிவாகியுள்ளது.

இதற்கமைய காசல்ரீ நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு இப்போது 13 சதவீதமாகவும், கொத்மலை நீர்த்தேக்கம் மற்றும் மவுஸ்ஸாக்கலை நீர்த்தேக்கம் முறையே 13.3 சதவீதம் மற்றும் 15 சதவீதம் கொள்ளளவாகவும் உள்ளது.

இதேவேளை விக்டோரியா நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 34 சதவீதமாகவும், ரந்தெனிகல நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 84 சதவீதமாகவும், சமன் வெவ நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு 38 சதவீதமாகவும் உள்ளது.

மேலும் மொத்த மின் உற்பத்தியில் 14 சதவீதம் மாத்திரமே நீர்மின் நிலையங்கள் மூலமாகவும், 72.5 சதவீதம் அனல் மின் நிலையங்களில் இருந்தும் கிடைக்கின்றன என அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-7,9)

# விலங்குகள் உரிமைச் சட்டம் நிலைநாட்டப்பட வேண்டும்

## சரத் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

குரங்குகளை ஏற்றுமதி செய்யும்போது விலங்குகள் தொடர்பான சட்டங்கள் கடைபிடிக்கப்பட வேண்டும் என முன்னாள் வன ஜீவராசிகள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

விலங்குகள் தொடர்பான உரிமைகள் உரிய சட்டங்களால் அமைக்கப்பட்டுள்ளன. இந்த உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என சரத் பொன்சேகா ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

உணவுக்காக விலங்குகளை ஏற்றுமதி செய்யக் கூடாது என்றும், சீனாவில் உள்ள எந்தவொரு தனியார் நிறுவனமும் இலங்கையில் இருந்து குரங்குகளை விரும்புகிறதா என்பதை சீனத் தூதுவர் கண்டறிய் வேண்டும் என்றார்.

அதேநேரம் குரங்குகள் போன்ற விலங்குகளும் மயில் போன்ற பறவைகளும் உணவுப் பயிர்களை நாசம் செய்வதாகவும் தெரிவித்தார். தற்போதைய வனவிலங்குகளுக்குப் பொறுப்பான அமைச்சர் மகிந்த அமரவீரவிடம் நான் ஏற்கனவே பேசி, நிலைமை குறித்து கலந்துரையாடியதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,9)

# வீதியில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

மட்டக்களப்பு நகர் முனைவீதி 2ம் குறுக்கில் வீதியில் உயிரிழந்த நிலையில் அடையாளம் காணப்படாத நிலையில் ஆண் ஒருவர் நேற்று சடலமாக மீட்டகப்பட்டுள்ளதாக மட்டு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த வீதியில் நேற்று காலை சடலம் ஒன்று இருப்பதை கண்டு பொது மக்கள் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதையடுத்து பொலிஸார் சம்பவ இடத்திற்கு சென்றனர் குறித்த நபர் நகர் பகுதியில் யாசகம் எடுத்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. நீதிமன்ற அனுமதியை பெற்று சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மட்டு போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர். (ம-7,9)

# தங்கத்தின் விலை மீண்டும் வீழ்ச்சி

உள்ளூர் சந்தையில் தங்கம் மற்றும் தங்க ஆபரணங்களின் விலை மீண்டும் வெகுவாக குறைந்துள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி அதிகரிப்பு மற்றும் தொழிலாளர் சந்தையில் விலை வீழ்ச்சி என்பனவே விலைக் குறைப்புக்குக் காரணம் என கொழும்பு செட்டியார் தெரு வர்த்தகர்கள் தெரிவத்தனர்.

அதன்படி, 22 கரட் தங்கத்தின் விலை நேற்று 145,000 ரூபாவாகும்.

மேலும், 24 கரட் தங்கம் உள்ளூர்ச் சந்தையில் ரூ. 150,000 மற்றும் ரூ. 155,000 இடையில் விற்பனை செய்யப்படுகிறது.

உள்ளூர் சந்தையில் தங்கத்தின் விலை ஆண்டின் தொடக்கத்தில் குறிப்பிடப்பட்ட விலையிலிருந்து கணிசமாகக் குறைந்துள்ளது. (ம-7,9)

# குவைத்திலிருந்து மேலும் 52 இலங்கையர்கள்

## நாட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்

குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் பதிவு செய்து அந்நாட்டில் நீண்ட காலமாக வீட்டுப் பணிகளில் ஈடுபட்டிருந்த 52 இலங்கையர்கள் நேற்று கட்டுநாயக்க விமான நிலையம் மூலம் நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த வகையில் குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் பதிவு செய்யப்பட்டு இலங்கைக்கு அனுப்பப்பட்ட ஐந்தாவது குழு இதுவாகும்.

இவர்கள் நேற்று காலை 06.05 மணியளவில் குவைத்திலிருந்து ஸ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் விமானமான UL-230 மூலம் கட்டுநாயக்க விமான நிலையம் வந்தடைந்தனர். (ம-7,9)

# அரச வருமானம் அதிகரிப்பு

2023 முதல் காலாண்டில் அரச வரி வருவாய் 216% அதிகரித்து 316 பில்லியன் ரூபா வருமானமாக பெறப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் முதல் காலாண்டிற்கான வரிவருவாயின் விபரத்தை உள்நாட்டு இறை வரித்திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, கடந்த ஆண்டின் இதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில், வருமான வரி மற்றும் பெறுமதி சேர் வரி வருவாய் கணிசமாக அதிகரித்துள்ளது. (ம-7,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை-இந்திய கடல் எல்லையும் மீன்பிடித் தொழிலும் ஓர் அலசல்

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 08

சரத்து -8. இந்த இரு நாடுகளிடையே உறுதிப்படுத்தப்பட்ட உடன்பாடு உறுதிப்படுத்தப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும். உடன்பாடு கையெழுத்தான நாளிலிருந்தே அது செயற்படுத்தப்படும்.


இந்தியகுடியரசு அரசாங்கத்திற்காக
கையொப்பம் - இந்திராகாந்தி
புதுதில்லி 28 ஜூன் 1974

இலங்கை குடியரசு அரசாங்கத்திற்காக கையொப்பம் - ஸ்ரீமாவோ ஆர்.டி. பண்டாரநாயக்க
கொழும்பு 26 ஜூன் 1974

1974 இந்தியா-இலங்கை ஒப்பந்த எல்லைக் கோடு


கடல் எல்லையின் (பாக்குநீரிணை முதல் ஆதாம் பாலம் வரையிலான) மொத்த நீளம் 85.375 கடல் மைல்கள். ஒப்பந்தத்தின் நிலைகளுக்கு இடையிலான (1 தொடக்கம் 6 வரை) தூரம்பின் வருமாறு:

1974 இந்தியா-இலங்கை ஒப்பந்த எல்லைக் கோடு இரண்டு முனையங்கள் மற்றும் நான்கு திருப்புமுனைகளைக் கொண்ட கடல் எல்லையை வரலாற்றுச் சிறப்பு மிக்க பாக்குவிரிகுடாவின் கடல் வழியாக வரையறுக்கிறது. ஒப்பந்தம் பாக்குவிரிகுடாவில் முடியும் எல்லையை சரியாகக் குறிப்பிடவில்லை என்றாலும்அது நிலை 1 இன் இருப்பிடம் மற்றும் இந்தியா மற்றும் இலங்கையின் அருகிலுள்ள கடற்கரைகளின் புவியியல் அம்சங்களிலிருந்து ஊகிக்கப்படலாம்.




*Detail of historic water boundary*

1974 ஒப்பந்தம்




வடக்கில், "இயற்கைநுழைவுப்புள்ளி" கலிமேர்புள்ளி தாழ்வான நீர்நிலையில் இருப்பதாகத் தோன்றுகிறது. அதே சமயம் தெற்குப்புள்ளி இலங்கையின் வடகிழக்கு கடற்கரையில் உள்ள பனைமரப்புள்ளியாகும். இந்த இறுதிக் கோட்டின் மொத்த நீளம் அண்ணளவாக 35.107 கடல் மைல்கள். விபரம் அட்டவணை 1 மற்றும் அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ளன.

| அட்டவணை-1 | | |
|---|---|---|
| Positions நிலையம் | Distance in Nautical Miles தூரம் கடல்மைல்களில் | Approximate water depths அண்ணளவான நீர் ஆழம் |
| 1 - 2 | 28.735 | 6.5 fathoms |
| 2 - 3 | 20.832 | 6.5 - 7 fathoms |
| 3 - 4 | 20.004 | 7 - 6.75 fathoms |
| 4 - 5 | 8.883 | 6.75 - 6 fathoms |
| 5 - 6 | 6.921 | 6 fathoms to low tide |

| அட்டவணை 2 | | |
|---|---|---|
| Positions நிலையம் | தளக்கோட்டில் (Base line) இருந்து புள்ளியின் தூரம் கடல் மைல்கள் | |
| | இந்தியா | இலங்கை |
| 1 | 15.748 | 19.360 |
| 2 | 19.469 | 19.432 |
| 3 | 21.828 | 20.595 |
| 4 | 10.876 | 12.276 |
| 5 | 5.815 | 6.921 |
| 6 | - | - |

1974 ஆம் ஆண்டு எல்லை நிர்ணயம் என்பது தேர்ந்தெடுக்கப்பட்ட, அதாவது மாற்றியமைக்கப்பட்ட, சம தூரக் கொள்கையின் பயன்பாட்டை பிரதிபலிக்கிறது. அதில் குறிப்பிட்டுள்ளபடி, கடல் எல்லையானது வரலாற்று நீர் மற்றும் பாக்கு விரிகுடாவின் கடற்பரப்பை பிரிக்கிறது. இருப்பினும், இரு தரப்பினரின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன என்று இவ் ஒப்பந்தம் கூறுகிறது. கச்சதீவுப் பிரச்சினையை அமைதியான முறையில் தீர்த்து வைப்பதற்கும் ஆடம்ஸ் பாலம்பகுதியில் இந்தியா-இலங்கை எல்லையை வரையறுப்பதற்கும் இவ் எல்லை ஒப்பந்தம் உதவுகிறது என்றும் கருதப்பட்டது.

இவ் ஒப்பந்தத்தை தொடர்ந்து கடல் எல்லையை கிழக்கு நோக்கி வங்காள விரிகுடாவிலும் தெற்கு நோக்கி மன்னார் வளைகுடா வழியாகவும் விரிவுபடுத்த இரு மாநிலங்களுக்கு இடையே மேலும்பேச்சுவார்த்தைகள் தொடங்கின. அதைத் தொடர்ந்து 1976 ஒப்பந்தம் கைச்சாதிடப்பட்டது.

## 1976 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடல்சார் ஒப்பந்தம்

1976 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே கடல்சார் ஒப்பந்தம் (கச்சதீவு ஒப்பந்தம்) என்பது ஆதம் பாலத்திற்குத் தெற்கே மன்னார் வளைகுடா பரப்பு மற்றும் வங்காள விரிகுடா பரப்பு ஆகியவற்றில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் உள்ள கடல் உரிமைகளையும் கடல் எல்லைகளையும் வரையறுத்துக் கொள்ளும் ஒப்பந்தமாகும். 1976 ஆம் ஆண்டு கச்சதீவு ஒப்பந்தப்படி, மன்னார் வளைகுடா பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க உரிமையில்லை. அவ்வொப்பந்தம் பற்றியும் கொடுக்கப்பட்டுள்ள சரத்துகள் பற்றியும் கீழே தரப்படுகின்றன.

**மன்னார் வளை குடாவில் மற்றும் வங்காள விரிகுடாவில் இரு நாடுகளுக்கும் இடையிலான எல்லை மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் 1976**

இந்தியக் குடியரசின் அரசு மற்றும் இலங்கைக் குடியரசு அவற்றின் வரலாற்று நீர்நிலைகளில் எல்லைக் கோட்டை நிர்ணயிக்க விரும்புகிறது.

இந்தியா விற்கும் இலங்கைக்கும் இடையில் மன்னார் வளைகுடாவில் மற்றும் வங்காள விரிகுடாவில் இரு நாடுகளுக்கும் இடை யிலான எல்லை மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களைத் தீர்ப்பதற்கு இருதரப்புக்கும் நியாயமான மற்றும் சமமான முறையில் எல்லாக் கோணங்களிலும் முழுக் கேள்வியையும் ஆராய்ந்து எடுத்து வரலாற்று மற்றும் பிறசான்றுகள் மற்றும் சட்ட அம்சங்களைக் கணக்கில் கொண்டு பின்வருமாறு ஒப்புக் கொண்டனர்.

சரத்து 1: ஆதம்பாலத்திற்குத் தெற்கே மன்னார் வளைகுடாபரப்பில் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான எல்லையானது, பின்வரும் நிலைகளில் அதில் கொடுத்துள்ள ஒழுங்குக்கு அமைய, நெடுங்கோட்டாலும் சமாந்தரக் கோட்டாலும் சுட்டிய நிலைகளை ஒட்டிய பெரும் வட்டங்களின் இணைப்புக் கோடே, இந்திய-இலங்கை எல்லைக் கோடாகும்.

நிலை 1 m : 09° 06'.0வடக்கு, 79° 32'.0 கிழக்கு
நிலை 2 m : 09° 00'.0வடக்கு, 79° 31'.3 கிழக்கு
நிலை 3 m : 08° 53'.8வடக்கு, 79° 29'.3 கிழக்கு
நிலை 4 m : 08° 40'.0வடக்கு, 79° 18'.2 கிழக்கு
நிலை 5 m : 08° 37'.2 வடக்கு, 79° 13'.0 கிழக்கு
நிலை 6 m : 08° 31'.2 வடக்கு, 79°04'.7 கிழக்கு
நிலை 7 m : 08° 22'.2 வடக்கு, 78° 55'.4 கிழக்கு
நிலை 8 m : 08° 12'.2 வடக்கு, 78°53'.7 கிழக்கு
நிலை 9 m : 07° 35'.3 வடக்கு, 78° 45'.7 கிழக்கு
நிலை 10 m : 07° 21'.0 வடக்கு, 78°38'.8 கிழக்கு
நிலை 11 m : 06° 30'.3 வடக்கு, 78°12'.2 கிழக்கு
நிலை 12 m : 05° 53'.9 வடக்கு, 77° 50'.7 கிழக்கு
நிலை 13 m : 05° 00'.0 வடக்கு, 77° 10'.6 கிழக்கு
13 m அப்பால் உள்ள எல்லை பின்னர் நீட்டிக்கப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொலைக்கு...

வைத்து விசாரணை செய்ய ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்று நேற்று முன்தினம் அனுமதியளித்தது.

அதனடிப்படையில் சந்தேகநபர் நேற்று அதிகாலை நெடுந்தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

சந்தேகநபர் .வழங்கிய தகவலின் அடிப்படையில் கொலை இடம்பெற்ற வீட்டின் பின்புறமாக உள்ள கிணற்றிலிருந்து கொலைக்கு பயன்படுத்திய கத்தி மற்றும் சந்தேகநபர் அணிந்திருந்த சாரமும் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நெடுந்தீவு மாவிலி இறங்குதுறையை அண்டிய 12ஆம் வட்டாரத்தில் கடற்படை முகாமுக்கு அண்மையிலுள்ள வீடொன்றில் இருந்து வெட்டுக்காயங்களுடன் ஐவரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

100 வயது மூதாட்டி படுகாயத்துடன் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுல செனரத்தின் கட்டளையில் யாழ்ப்பாணம் பிராந்திய மூத்த பொலிஸ் அத்தியட்சகர் விஷாந்தின் வழிகாட்டலில் பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் துரித விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,9,33)

## கிளிநொச்சியில்...

கிளிநொச்சி டிப்போ சந்திப் பகுதியில் உள்ள சந்திரன் பூங்காவுக்கு சொந்தமான காணியை இராணுவத்தினர் நேற்று அளவீடு செய்தபோது பொது மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

கிளிநொச்சி நகர மையத்தில் அமைந்துள்ள டிப்போ சந்தி சந்திரன் பூங்காவிற்கு சொந்தமான காணியை இராணுவத்தினர் நேற்று அளவீடு செய்தனர்.

இவ்வாறு இராணுவத்தினரால் காணி அளவீடு செய்ததற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. குறித்த காணி நகரத்தின் முக்கிய தேவைகளுக்கு தேவைப்படுகின்றபோதும் படையினர் காணியை நீண்ட காலமாக வைத்து வருவதுடன் இந்த காணியை அளவீடு செய்து சுவீகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருப்பதாகவும் எதிர்ப்பில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (ம-7,9,315)

## அதிக வெப்பம்...

போட்டியில்பங்கேற்று களைப்புக் காரணமாக ஐஸ் தண்ணீரை தலையில் ஊற்றியதில் ஏற்பட்ட பாதிப்பால் இறந்துள்ளார்.

மற்றவர் தனது வயலில் புல் அறுத்தபோது வெப்பம் தாங்காமல் இறந்துள்ளதாக எப்பாவல மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

எப்பாவல கீழ் தியம்பலேவயில் வசித்த அதுல தம்மிக்க (வயது-34) மற்றும் எப்பாவல கட்டியவ பகுதியில் உள்ள எல்.ஜி. விஜேசிங்க (வயது-38) ஆகிய இருவருமே உயிரிழந்துள்ளனர். (ம-7,9)

## வர்த்தகம்...

புக்கு ஆதரவளிப்பதாக சம்பந்தப்பட்ட வர்த்தக நிலையங்கள் அறிவித்துள்ளன.

வடக்கிலுள்ள அனைத்து பிரதான நகரங்களின் வர்த்தகர் சங்கங்களும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளதாக பகிரங்கமாக அறிவித்துள்ளன.

கிழக்கில் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்களும் இன்று மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

**போக்குவரத்து, கல்வி**

வடமாகாணம் முழுவதும் இன்று தனியார் பேருந்து சேவை இடம்பெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாணத்திலும் இதே நிலைமையே காணப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று கல்விச்சேவைகளும் முடங்கும் என ஆசிரியர் சங்கங்கள் அறிவித்துள்ளன.

வடக்குக் கிழக்கு முழுவ தும் இன்று பாடசாலை, தனியார் கல்வி நிலையங்களில் கற்பித்தல் செயற்பாடுகள் முடங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. பெற்றோர் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்பி வீணாண அசௌகரியங்களை சந்திக்காமலிருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**சலூன்கள், சந்தைகள் இயங்காது**

இன்று வடக்கில் சந்தை வியாபாரிகள் வர்த்தகத்தில் ஈடுபடமாட்டார்கள். இது தொடர்பில் அந்தந்த மாவட்ட சந்தை வியாபாரிகள் சங்கத்தினர் ஏற்கெனவே பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளனர்.

கிழக்கில் பகிரங்க அறிவித்தல் ஏதுவும் விடுக்கப்படாவிட்டாலும், இன்று சந்தைகளை மூடுவதென அனைத்து பிரதான நகரங்களிலும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேபோல இன்று சலூன்களும் திறக்காது. வடமாகாண அழகக சங்கங்களின் சமாசத்தின் தலைவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில்,

இன் றைய போராட்டத்தை வெற்றியடைய செய்ய, அழகக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. கிழக்கிலுள்ள சலூன்களும் இன்று மூடப்பட்டிருக்கும்.

**சட்டத்தரணிகள் முன்னிலையாகார்**

இன்று நீதிமன்றங்களில் முன்னிலையாகுவதில்லையென பல சட்டத்தரணிகளின் அமைப்புக்கள் அறிவித்துள்ளன.

இதேவேளை, பல்வேறு மத அமைப்புக்களும் போராட்டத்துக்கு ஆதரவளித்துள்ளன. திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தின் தவத்திரு அகத்தியர் அடிகளார், யாழ் மெய்கண்டார் ஆதீனத்தின் தவத்திரு உமாபதிசிவம் அடிகளார், இந்து சமய பேரவையின் தலைவர் ஈசான சிவசக்தி கிரீவன் ஆகியோரும் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

**மீனவர்களும் ஆதரவு**

இன் றைய போராட்டத் திற்கு கடற்றொழிலாளர் சங்கங்களும் ஆதரவு தெரிவித்துள்ளன.

இதேவேளை, வடமாகாண தனியார் வர்த்தக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பில், இன்று வடமாகாண தனியார் ஊழியர்கள் பணிகளுக்கு செல்ல வேண்டாமென அறிவித்துள்ளது.

**முஸ்லிம்களும் ஆதரவு**

இன்றைய கதவடைப்புக்கு முஸ்லிம் தரப்பும் ஆதரவளித்துள்ளது. மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களிலுள்ள பல பள்ளிவாசல்கள், வர்த்தக சமூகங்கள் போராட்டத்தை ஆதரித்துள்ளன. (ம-7,9,33,104)

## புத்த சாசனத்தை...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இரு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் "உப சம்பதா" நிகழ்வு எதிர்வரும் ஜூலை 21ஆம் திகதி முதல் 27ஆம் திகதி வரையில் மாத்தளை ஸ்ரீ சங்கபோதி பிரிவெனாவை மையப்படுத்தி மகாவலி கங்கையின் கிளை நதியான சுதுகங்கையை அண்மித்து அமைக்கப்பட்டுள்ள சீமாமாலகய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொள்ளவுள்ளார்.

13 ஜூன் 1863 காலி ஆற்றின் உடகுக்கேபா எல்லையில் தொடங்கிய உபசம்பதா நிகழ்வுடனேயே ராமன்ய பீடம் ஆரம்பிக்கப்பட்டதோடு, 160 வருடங்களாக இந்நிகழ்வானது அரச அனுசரணையுடன் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

## காங்கேசன்...

விக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சமூக ஊடகங்களிலும் செய்திகள் மற்றும் புகைப்படங்களும் வெளியாகியுள்ளன. (ம-7,9)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1551
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 7 9 7 2 2 9
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.04.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1126
L 29 38 65 71
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.04.24
சீட்டிழுப்பு இலக்கம் 3338
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Y 03 47 57 62
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/04/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1444
L 08 27 31 41 58

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.04.24
சீட்டிழுப்பு இலக்கம் 405
மேஷம் 08 20 46 57 மேஷம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/04/24
சீட்டிழுப்பு இலக்கம் 5096
Z 5 9 0 0 0 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2070
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.04.24
தினம் திங்கட்கிழமை
S 28 43 52 58
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,592,060/-
DLB

சனிதா
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.04.24
சீட்டிழுப்பு இல : 4231
வர்ணம் : இள நீலம்
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 5,123,660/-
வெற்றி இலக்கங்கள்
01 02 30 58 N
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 3,944,384.80
திகதி 2023-04-24
வெற்றி வாரம் 3782
வர்ணம் மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 11 30 42 52
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 10,237,940/-
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
Q 17 12 31 50 68
சீட்டிழுப்பு வாரம் 1246
வர்ணம் பச்சை
திகதி 2023.04.24 திங்கட்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 325,110,444.20
DLB DEVELOPMENT LOTTERIES
தொலை பேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1915
சீட்டிழுப்பு திகதி 2023-04-24
வெற்றி இலக்கங்கள்
07 17 46 65 U
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 42,193,318.80
DLB DEVELOPMENT LOTTERIES
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல : 1896
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2023.04.24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,494,140/-
வெற்றி இலக்கங்கள்
37 44 56 64 D
DLB


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெல்லி அணி வெற்றி

ஐதராபாத்திற்கு எதிரான போட்டியில் டெல்லி அணி 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. டாஸ் வென்ற டெல்லி கேப்பிட்டல் அணி முதலில் பேட்டிங் செய்வதாக அறிவித்தார்.

இதையடுத்து தொடக்க வீரராக களமிறங்கிய கேப்டன் வார்னர் 21 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். மற்றொரு தொடக்க ஆட்டக்காரரான பில் சால்ட் றன் எதுவும் எடுக்காமல் அவுட் ஆகி அதிர்ச்சியளித்தார். மிட்செல் மார்ஷ் 25 ரன்கள் எடுத்திருந்த நிலையில், ஆட்டமிழக்க, பொறுப்பாக ஆடிய மணீஷ் பாண்டே மற்றும் அக்ஷர் படேல் தலா 34 ரன்கள் எடுத்து அணியின் ஸ்கோரை உயர்த்தினர்.

அடுத்தடுத்து களமிறங்கிய வீரர்கள் சொற்ப ரன்களில் அவுட்டாகினர். இதையடுத்து 20 ஓவர்கள் முடிவில் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 144 ரன்கள் எடுத்தது.

இந்த நிலையில் 145 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் சன் ரைசர்ஸ் ஐதராபாத் அணி 137 ஓட்டங்கள் எடுத்து தோல்வியடைந்தது.





# வெடுக்கு...

பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

வவுனியா நீதவான் நீதிமன்றத்தில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நிலையில் குறித்த வழக்கில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன் ஊடகங்களுக்கு இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் வழக்கின் தீர்ப்புகள் தொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் சிலைகளை உடைத்தது சம்பந்தமான வழக்கு நீதவான் நீதிமன்றத்தில் எடுத்து கொள்ளப்பட்டது. இந்த வழக்கில் பொலிஸார் இனந்தெரியாத நபர்களினால் வணக்கத்திற்குரிய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டமை தொடர்பாக தகவல் கொடுத்துள்ளார்கள்.

ஆனால் எவரும் கைது செய்யப்படவில்லை. யாரென்று தெரியாது தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுப்பதாக சொல்கின்றனர். கடந்த தினத்தில் மேலதிகமாக அறிக்கைகள் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டதற்கமைவாக இன்று குறித்த இடத்தில் நீண்டகாலமாக பூசை வழிபாடுகள் இடம்பெற்றமைக்கான புகைப்பட ஆதாரங்களை அவர்களே சமர்ப்பித்துள்ளனர்.

அதுமட்டுமன்றி இது தொல்லியலுக்குரிய பிரதேசமென்றும் நாங்கள் செய்த விண்ணப்பத்திற்கு பதில் அளிப்பதற்கு அரச சட்டத்தரணியும் உதவியை நாடியுள்ளதாகவும் அதற்காக பிறிதொரு தினத்தையும் கேட்டிருந்தார்கள்.

எமது அரசியலமைப்பின் 10 ஆம் 14:1 உறுப்புரைகளின் கீழ் மத வழிபாடு என்பது எவராலும் மட்டுப்படுத்த முடியாத உரிமைகள். மரத்தையோ, கல்லையோ வழிபடலாம் அதற்கு பூரண உரித்துள்ளது. அந்த மரம் வனப்பிரதேசத்தில் இருப்பதால் வணங்க முடியாது என எவரும் கூறமுடியாது. ஒரு கல் தொல்லியலுக்குரியது என்பதற்காக அதனை வணங்க முடியாது என எவரும் கூற முடியாது. அவ்வாறு சொல்வதாக இருந்தால் அனுராதபுரத்திலும், பொல்ன்னறுவையிலும் சென்று எவரும் வழிபட முடியாது. இந்த விடயங்கள் இன்று நீதிமன்றத்தில் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் நீதவான் இடைக்கால உத்தரவை வழங்கியுள்ளார்.

அதாவது வெடுக்குநாறி பிரதேசத்திலே வணக்கங்களை நடத்துவதற்கு பக்தர்கள் செல்வதை எந்த அரச அதிகாரியும் தடுக்க கூடாது என்ற உத்தரவு கொடுக்கப்பட்டு பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. உடைக்கப்பட்ட சிலைகளை மீள கட்டுவது சம்பந்தமாக தொல்லியல் பிரதேசம் என்ற காரணத்தினாலே மீள் அமைப்பதும் தொல்லியல் என்ற காரணத்தினாலும் அரச சட்டத்தரணியும் வந்த பிறகு ஒரு விண்ணப்பத்தை செய்வதாக சொல்லியிருக்கின்றேன் என தெரிவித்தார். (ம-7,9,299)

## பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம்

# பாராளுமன்றில் இன்று சமர்ப்பிக்கப்பட மாட்டாது

(கொழும்பு)

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவினால் கொண்டுவரப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் இன்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படமாட்டாது எதிர்வரும் தினங்களில் அச்சட்டமூலம் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்கத்தினால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலத்தின் உள்ளடக்கம் தொடர்பில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பாரிய எதிர்ப்பலை தோற்றம் பெற்றுள்ள நிலையில், அச்சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதை இம்மாத இறுதி வாரம் வரை தாமதிக்கப் போவதாகக் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அறிவித்திருந்தார்.

அதன்படி அச்சட்டமூலமானது 25 ஆம் திகதி அல்லது 26 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்புட்ட நிலையில், அச்சட்டமூல சமர்ப்பணம் தொடர்பில் நேற்று திங்கட்கிழமை மாலை 4 மணிவரை ஒழுங்குப் பத்திரத்தில் உள்வாங்கப்படவில்லை என பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ உறுதிப்படுத்தினார்.

அதேபோன்று பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் மீதான முதலாம் வாசிப்பு 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெறாது என நேற்றய தினம் தமக்கு அறிவிக்கப்பட்டதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

இருப்பினும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச்சட்டமூலம் 25 ஆம் திகதி அல்லது 26 ஆம் திகதி சமர்ப்பிக்கப்படும் என்றே அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்ததாகவும், அத்தீர்மானத்தில் மாற்றம் இடம்பெற்றிருப்பின், அது குறித்துத் தாம் அறியவில்லை எனவும் நீதியமைச்சரின் ஊடகப்பிரிவு தெரிவித்தது. (ம-7,9)


## பணிப்பெண் தேவை

யாழ் நகர் உள்ள சிறிய குடும்பம்
ஒன்றிற்கு
வீட்டில் தங்கி இருந்து
பணிபுரிவதற்கு
பணி பெண் ஒருவர் தேவை 15362

077 327 6502

## வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பத்திற்கு வீடு தேவை
திருநெல்வேலி, கல்வியங்காடு
கொக்குவில், கோண்டாவில், பலாலி
வீதி, நல்லூர் பால்பண்ணை ஆகிய
இடங்கள் விரும்பத்தக்கது 15354

077 911 3680

## VILLAGE HOTEL

யாழ் - கொழும்பு பஸ் சேவை
மீண்டும் ஆரம்பம்
AIRPORT PICK UP DROP SERVICE




## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 15 பரப்பு காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100m தூரத்தில்.
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை (120,000/-) ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1 Km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1 Km தூரம்


பார்வையிடும் நேரம் : காலை 6 மணியிலிருந்து மாலை 6 மணி வரை (15360)

076 755 8606 ,077 638 5683

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் புத்தூரில் 27 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு

- பருத்தித்துறை வீதி, புத்தூர்ச் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு
- நன்னீரூற்று
- ஒரு பரப்பின் விலை 3 இலட்சம் (300,000/-)
- குடியிருப்பு சூழவுள்ள பகுதி
- பார்வையிடும் நேரம்
  காலை 6 முதல் மாலை 6 வரை



முழுக்காணிகளும் பிரதான காபற் வீதி முகப்புடனே உள்ளது.

076 911 9371, 076 165 3129 (15360)



## கொட்டடி சித்தி விநாயகர் ஆலய

## பொதுக்கூட்டம் - 2023

(கொட்டடி சித்திவிநாயகர் ஆலயம், துறைமுக வீதி, பருத்தித்துறை.)

எமது ஆலயத்தின் 2023ஆம் ஆண்டிற்கான
பொதுக் கூட்டம் எதிர்வரும் 07.05.2023
ஞாயிற்றுக்கிழமை பி.ப 4.00 மணிக்கு
ஆலய வசந்தமண்டபத்தில் நடைபெறும்.

*எம் பெருமானின் அடியவர்கள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு அன்பாக வேண்டுகிறோம்.*

சுபம்

இப்படிக்கு:- செயலாளர்

(C-6427)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.